பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 29 வியாழக்கிழமை 13.02.2020 கதிர் 99

இனி இது ரகசியம் அல்ல!

ஐக்கிய தேசியக் கட்சியின் உள் வீட்டுப் பிரச்சினை நாளொரு வண்ணமும் பொழுதொரு திருப்பமுமாக மாறிக் கொண்டிருக்கின்றது.

இவ்வளவு இழுபறிகள், பிரச்சினைகள், முரண்பாடுகளுக்குப் பின்னரும் ரணிலும் சஜித்தும் தொடர்ந்து பக்கம் 02

# இலங்கை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் விரைவில் தீர்மானம்!

## கொழும்பு வந்த குழுவினர் சம்பந்தனுக்கு வாக்குறுதி



கொழும்பு, பெப்ரவரி 13

இலங்கை தொடர்பில் தமது நிலைப்பாடுகள் மிக விரைவில் தாம் எடுக்கும் தீர்மானங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் என ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் வாக்குறுதியளித்துள்ளனர். பக்கம் 03

## தொழிலாளருக்கு ரூ.1000 சம்பளம் அதிகரிப்பு மீளத் தள்ளிப்போகின்றது

பெருந்தோட்ட தொழிலாளர்களது தினசரி ஆயிரம் ரூபா என்ற வேதன அதிகரிப்பு சம்பந்தமான உடன்படிக்கை ஒன்று இன்று கைச்சாத்திடப்படுமென கூறப்பட்டிருந்த நிலையில் அந்த நடவடிக்கை கடைசி நேரத்தில் பிற்போடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தில் பெருந்தோட்ட நிறுவனங்களுடன் தொடர்ந்தும் பேச்சு நடத்தப்பட வேண்டிய நிலையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸினுடைய தலைவருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

## புனாணையில் சடலம்; செத்தவரின் மீதே சூடு!

### மரணச் சான்றறிக்கையில் தகவல்

மட்டக்களப்பு – புனாணை, ஓமனியாமடு காட்டுப் பகுதியில் சடலமாக ஒருவர் மீட்கப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த நபர் கொலை செய்யப்பட்ட பின்னர் அவரது சடலத்தின் மீது துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளார் என சட்ட வைத்திய அதிகாரி தமது மரணச் சான்றறிக்கையில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, கொல்லப்பட்டவரின் மைத்துனர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு வாழைச்சேனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி நேற்று உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 31ஆம் திகதி புனாணை ஓமனியாமடு காட்டுப்பகுதியில் துப்பாக்கி சூட்டு பக்கம் 03

## மேற்குத் தூதரகங்களுடன் தொடர்புடைய கொழும்பு ஊடகவியலாளர்கள் வலையில்?

கொழும்பு,பெப்.13

கொழும்பில் மேற்கத்தைய தூதரகங்களுடன் தொடர்புகளைப் பேணிவரும் ஊடகத் தரப்புக்களை அரச புலனாய்வு துறை இலக்கு வைக்கத் தொடங்கியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

இதன் தொடர்ச்சியாக சுவிஸ் தூதரகப் பணியாளர் விவகாரம் தொடர்பில் பத்திரிகையாளர் ஒருவரை இலங்கைக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

தூதரகப் பெண் பணியாளர் கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் பத்திரிகையாளர் அனுரங்கி சிங் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என குற்றப் பக்கம் 03

## சஜித் கூட்டணியில் 3 முக்கிய கட்சிகள்!

கொழும்பு, பெப். 13

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான கூட்டணியில் இணைந்துகொள்வதாக ஜாதிக ஹெல உறுமய, தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அறிவித்துள்ளன.

மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் மாறாக பயணிக்கும் தற்போதைய அரசுக்கு எதிராகப் பாரிய மக்கள் சக்தியை உருவாக்கும் பொறுப்பு தமக்கு வழங்கப்பட்டுள்ளதாக இந்தக் கூட்டணியின் கட்சிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பக்கம் 03

## பல்கலை பகிடிவதை தொடர்பாக பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாக பாலியல் அச்சுறுத்தல் மற்றும் பகிடிவதை சம்பவம் தொடர்பில் இலங்கை குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மாணவிகள் சார்பில், பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டமையை அடுத்து, பொலிஸாரும் பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கணினி குற்றவியல் விசாரணை பக்கம் 03

## பல்கலை மாணவனின் வீட்டின் மீதான தாக்குதலுக்கு உரிமை கோரும் ஆவா



யாழ்ப்பாணம், பெப். 13

பகிடிவதைக் குற்றச்சாட்டில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் வளாகங்களுக்குள் நுழைய இடைக்காலத்தடை விதிக்கப்பட்ட மாணவனின் வீட்டின் மீது தாமே தாக்குதலை மேற்கொண்டதாக ஆவா குழு, முகநூல் ஊடாக உரிமை கோரியுள்ளது. பக்கம் 03

### தொல்பொருள் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழா?

## தமிழரின் வரலாற்றைத் திரிபுபடுத்திக் காட்ட நாசகாரத் திட்டம் என சி.வீ.கே. எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.13

தொல்பொருள் திணைக்களத்தைப் பாதுகாப்பு அமைச்சிற்குள் கொண்டு வருவது பொருத்தமான விடயமல்ல என வட மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது வீட்டில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

அரசு தீர்மானிக்கும் விடயத்தை தமிழ் மக்களிடம் திணித்து, தமிழ் மக்களின் வரலாற்றை திரிபுபடுத்த எத் பக்கம் 03



## தமிழகத்தின் வாக்குகளைப் பெறவே ‘13’ ஐ நினைவுபடுத்துகின்றார் மோடி!

### குணதாச அமரசேகர குற்றச்சாட்டு



புதுடில்லி,பெப்.13

இந்தியப் பிரதமர் மோடிக்கு தமிழ் நாட்டின் வாக்குகள் தேவை என்பதாலேயே, அவர் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நினைவுபடுத்துகிறார் என்று சிங்களத் தேசிய அமைப்புகள் ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கில் அரசியலில் ஈடுபட்ட இனவாதிகள் மக்களுக்காக மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட பக்கம் 03

## நோயாளியின் மீது பாலியல் வல்லுறவு வைத்தியருக்கு 15 வருடக் கடூழியம்!

### திருகோணமலை நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

சிகிச்சைக்கு சென்ற பெண் நோயாளர் ஒருவரை பாலியல் வல்லுறவு புரிந்த வைத்தியர் ஒருவருக்கு பதினைந்து ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்த திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், தலைமறைவாகியுள்ள அந்த வைத்தியரைக் கைது செய்யப் பிடியாணை உத்தரவும் பிறப்பித்துள்ளார்.

திருகோணமலை கந்தளாயில் 2012ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆயுர் வேத சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைக்கு சென்ற பெண் நோயாளி ஒருவர் மீது பாலியல் வல்லுறவு புரிந்ததார் என்ற குற்றச் பக்கம் 03

# வெளிக்களச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்த தடை

கொழும்பு, பெப். 13

தற்போது நிலவும் வெப்பமான காலநிலையைகருத்திற்கொண்டுமாணவர்களை முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரையில் வெளிக்களச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தவேண்டாம் எனக் கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கல்வியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தற்போது நிலவும் காலநிலையைக் கருத்திற் கொண்டு மாணவர்களை 11 மணி முதல் 3.30 மணி வரையில் வெளிகளச் செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டாம். நிலவும் வெப்பமான காலநிலையைக் கருத்திற்கொண்டு பாடசாலை மட்டத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் சுகாதார அமைச்சு கல்வி அமைச்சுக்கு பரிந்துரைகளை வழங்கியுள்ளது. (ஐ)

# குமாரபுரம் படுகொலைகளின் 24ஆம் ஆண்டு நினைவேந்தல்




திருகோணமலை - கிளிவெட்டி, குமாரபுரம் படுகொலையின் 24 ஆவது ஆண்டு நினைவேந்தல், குமாரபுரம் கிராம மக்களின் ஏற்பாட்டில், குமாரபுரம் படுகொலை நினைவு தூபியில் நேற்று முந்தினம் மாலை நடைபெற்றது.

இதன்போது, உறவினர்கள், உயிரிழந்த தமது உறவுகளுக்கு மலர் தூவி, சுடரேற்றி, அஞ்சலி செலுத்தினர். இந்த நினைவேந்தலில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கமும் கலந்து கொண்டார்.

1996.02.11 அன்று இடம்பெற்ற குமாரபுரம் படுகொலையில், 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட 09 பிள்ளைகள், 09 பெண்கள் உட்பட 24 பேர் படுகொலை செய்யப்பட்டனர். மேலும், 26 பேர் படுகாயமடைந்தனர்.

# இளையோர்கள் சிலரை முகநூலில் வைத்துக் கொண்டு எம்மீது சேறு பூசுகிறது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

## அனந்தி சசிதரன் சீற்றம்



யாழ்ப்பாணம்,பெப்.13

தம்மிடம் சில இளையோர்கள் முகநூலில் இருக்கின்றார் என்பதை வைத்துக் கொண்டு உண்மைக்குப் புறம்பாக எங்கள் மீது சேறு பூசுகின்ற செயற்பாட்டைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் முன்னெடுக்கின்றனர் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான ஈழமக்கள் சுயாட்சிக் கழகத்தின் தலைவர் அனந்தி சசிதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி புதிதாகத் தோற்றம் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான மாற்று அணியாக இருக்கின்ற நிலையில் பலதரப்பட்ட விமர்சனங்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் இந்தப் புதிய கூட்டணியை ஏற்றுக்கொள்ள முடியாமை காரணமாக பல விமர்சனங்களை அவர்கள் முன்வைக்கின்றனர். அவர்களுடைய விமர்சனங்களுக்கு எம்மால் விளக்கம் சொல்வதற்கு அப்பால், எங்களுக்கு ஒரு பொதுவான எதிரியாக இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டவேண்டிய அரசாக இலங்கை அரசு இருக்கின்ற படியால் அது என்ன செய்கின்றது, அதன் நடவடிக்கைகளுக்கு எதிராக எவ்வாறு போராடலாம் என்பதைச் சிந்திக்கின்றவர்களாகத்தான் நாம் இருக்கின்றோம்.

ஆனால் நான்கு, ஐந்து பேர் கொண்ட கூட்டாக எம்மைக் கூறுவதும் இந்தக் கூட்டணி மக்கள் மத்தியில் நிலைக்கப் போவதில்லை, தாங்கள்தான் மக்கள் மத்தியில் நிற்கப் போகின்ற கூட்டமைப்புக்கு எதிரான மாற்று அணியினராக தங்களைச் சித்திரித்துக் கொண்டும் எங்களை விமர்சித்துக் கொண்டும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் பலவாறாகப் பேசி வருகின்றனர்.

நான், விக்னேஸ்வரன் ஐயா எல்லோருமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை ஒன்றாகவும் செயற்பாடு ஒன்றாகவும் உள்ளபடியால்தான் வெளியேறினோம் தவிர, ஆசனப் பங்கீட்டுக்காக அந்தக் கட்சியைவிட்டு வெளியேறியவர்கள் அல்லர்.

மீண்டும் நாம் தெளிவாகக் கூறுகின்றோம், 2010ஆம் ஆண்டுமுதல் கொள்கை, கொள்கை என்று பேசிக்கொண்டிருக்கின்ற இதே முன்னணியினர், தங்களுக்கு இருந்த நாடாளுமன்ற ஆசனப் பங்கீடு காரணமாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அதிருப்தியடைந்து கட்சியிலிருந்து வெளியேறினர். அவ்வாறு கொள்கை காரணமாக வெளியேறாமல் ஆசனப் பங்கீட்டுக்காக வெளியேறியவர் இன்று எம்மைச் சில முகநூல்கள் ஊடாக விமர்சிப்பதும் ஊடகங்கள் வாயிலாக விமர்சிப்பதும் மிகவும் மனவருத்தத்தைத் தருகின்றது.

ஏனென்றால் ஜனநாயக ரீதியாக யாருமே அரசியலில் இறங்கக் கூடிய வாய்ப்பிருக்கின்றது. ஏன் எதற்காக இவர்கள் குத்தி முறிந்துகொண்டு இருக்கின்றார்கள் என்பது எங்களுக்குப் புரியவில்லை.

தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு மேலாகத் தாம் தேசியத்தில் கொள்கைப் பற்றுள்ளவர்களாக இருந்திருந்தால் ஓர் போர்க்குற்றவாளியான சரத் பொன்சேகாவை 2010ஆம் ஆண்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் எவ்வாறு கூட்டமைப்புக்குள் இருந்துகொண்டு ஆதரித்திருந்தார்கள்?

போர்க்குற்றவாளியான மஹிந்தவையும் ஆதரிக்கமாட்டேன், மைத்திரியையும் ஆதரிக்கமாட்டேன் என்று 2015ஆம் ஆண்டு நான் எடுத்துக் கொண்ட நிலைப்பாடுதான் என்னைக் கட்சியிலிருந்து விலக்குவதற்குத் தீர்மானம் எடுக்க வைத்தது.

அதேபோன்று 2010ஆம் ஆண்டு வெளியாகிய விக்கிலீக்ஸில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தான் சர்வதேச விசாரணையைக் கோரவில்லை என்ற செய்தியையும் தெரிவித்தமையைக் காணக் கிடைத்தது-என்றார். (ஐ-07)

# இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்திருக்கிறார்கள்; பேசுகின்றார்கள்; அதுவும் கருத்து வேறுபாடுகளைக் களைதல் என்ற பெயரில் உரையாடல்கள் நடகின்றன. நான் நினைக்கிறேன் "Both were agreed to disagree always'. எல்லாச் சமயங்களிலும் தமக்குள் முரண்பட்டே நிற்பது என்பதில் இருவரும் இணக்கம் கண்டுள்ளனர் போலும்.

கட்சியின் யானைச் சின்னத்தில்தான் போட்டியிட வேண்டும், வேறு சின்னத்தில் கட்சி போட்டியிட முடியாது என்ற ரணிலின் தரப்பின் முடிவால் சீற்றத்துடன் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தை விட்டு வெளியேறிய சஜித்துடன் நேற்று மாலை மீண்டும் ஒரு சுற்று சமரசப் பேச்சு நடத்துவதற்கு ரணில் தயாராக விருந்தார். இரு தலைவர்களும் நேருக்கு நேர் -தனித்தனியாக - பேசவிருந்தனர்.

கட்சிச் செயலாளராக ரணிலின் ஆளான அகிலவிராஜ் காரியவசத்தை வைத்துக்கொண்டு, கட்சியின் சின்னத்தில்தான் தேர்தலில் இறங்க வேண்டும் என்றால் அது எப்படி சாத்தியம் என்பதுதான் சஜித் தரப்பின் கேள்வி. தேர்தல் விடயத்துக்கான - பிரசாரத்துக்கான - தமது அணியின் செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டாரவைத் தான் தேர்ந்து வைத்திருக்கையில், அகிலவிராஜ் காரிவசத்தைக் கட்சிச் செயலாளராக வைத்துக்கொண்டு கட்சிச் சின்னத்தில் நான் என்ன செய்வது என்பதுதான் சஜித்தின் பிரச்சினை.

அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு தருவதற்குப் புதிய யோசனை ஒன்றை நேற்று சஜித்திடம் முன்வைக்க ரணில் தயாராக இருந்தார்.

அகிலவிராஜ் காரியவசத்தை ஐ.தே.க. செயலாளர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்ய வைத்து கட்சிச் செயலாளர் பதவியை சஜித்தின் பிரதிநிதியான ரஞ்சித் மத்துமபண்டாரவுக்கு வழங்குவது, அதனை ஏற்று பிரசாரத்தையும் கூட்டணியையும் ஐ.தே.கட்சி சின்னத்தில் சஜித் முன்னெடுப்பது - இதுதான் ரணிலின் திட்டம்.

நேற்றுமாலை திட்டமிட்டபடி சந்திப்பு இடம்பெற்றதா, ரணிலின் இந்தத் திட்டத்துக்கு சஜித் இணங்கினாரா என்பவை எல்லாம் தெரியவில்லை.

ஆனால் ரணிலின் உத்தேசத் திட்டம் குறித்து சஜித் தரப்புக்கு சில சட்டவட்டாரங்கள் முற்கூட்டியே உஷார்படுத்தல்களை - எச்சரிக்கைகளை - வழங்கின என அறியவந்தது.

ஐ.தே.கட்சியின் தற்போதைய யாப்பின் படி கட்சியின் தலைவருக்கு கட்டுமட்டில்லாத அதிகாரங்கள் உண்டு. விரும்பிய நேரத்தில் கட்சியின் செயலாளரைத் தம் விருப்பப்படி நீக்கவும் புதியவரை நியமிக்கவும் கூடத் தலைவரால் முடியும்.

ஆகவே இப்போது மத்தும பண்டாரவைக் கட்சிச் செயலாளராக்கிவிட்டுத் தேர்தல் வேட்பாளர் தெரிவு சர்ச்சை வரும்போதோ அல்லது தேர்தல் பிரசாரத்தின் போதே அல்லது தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தின் போதோ அல்லது தேர்தல் முடிந்த பின்னரோ ரணில் விரும்பினால் இடைநடுவில் மத்தும பண்டாரவை எச்சமயத்திலும் விலக்கிவிட்டுத் தனக்கு விரும்பிய போது ஒருவரை அப்பதவிக்கு நியமிக்க முடியும். ஆகவே கட்சியின் தலைவராக ரணிலை வைத்துக்கொண்டு, கட்சிச் சின்னத்தில் போட்டியிடும் போது, புதிய அரசியல் கூட்டணியின் லகான் தன் கைகளில இருப்பதாக சஜித் கருத முடியாது எனசட்ட அபிப்பிராயம் சஜித்துக்கு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இந்தப் பிரச்சினையை சஜித் தரப்பு எப்படிக் கையாண்டு வெற்றி கொள்ளப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

★ ★ ★

மொட்டுக் கட்சியில் இனி எல்லாம் ராஜபக்ஷக்கள்தான். சு.கவினரோ மைத்திரியோ அங்கு வாலாட்ட முடியாது. அப்படி ஒரு தீர்மானத்துக்கு மொட்டுக் கட்சித் தலைமை வந்துவிட்டது என்பது உறுதி.

வரும் தேர்தலுக்கான பிரசாரத்தை தலைமை வகித்து முன்னெடுக்கும் பொறுப்பை பிரதமர் மஹிந்தர் ஏற்கின்றார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதற்கு பக்கபலமாக உதவுவார். மொட்டுக் கட்சியின் செயலாளர் பதவியையும், தேர்தல் ஒழுங்குகளையும் பஸில் ராஜபக்ஷவே நேரடியாக பொறுப்பேற்பார். இதுதான் நிலைமை.

வேட்பாளர் பட்டியலிலும் தேசியப் பட்டியலிலும் நியமிப்பதற்கு சுமார் நாற்பது பெயர் கொண்ட ஒரு பட்டியலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்குவார். அதற்கு இடமளிக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பதாகவும் ஒரு தகவல்.

மொட்டுக் கட்சியுடன் பாரம்பரியமாக அரசியல் செய்யாத - கோட்டாவுக்கு வேண்டிய -முன்னாள் படையினருக்கும் பிற பிரமுகர்களுக்கும் புதிய அரசியல் இடமளிப்பதற்காக இந்த ஏற்பாடாம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பிருந்தே 'வியத்மக', 'எலிய' போன்ற சில அமைப்புக்களில் பல நூற்றுக்கணக்கில் துறைசார் நிபுணர்களும், பிரமுகர்களும் இணைந்து கோட்டாவுக்காக உழைத்திருக்கின்றனர். அவர்களைப் புதிய அரசில் இடம்பெறச் செய்வதன் மூலம், புதிய அரசைத் தனது முழு வழிநடத்தலில், கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு கோட்டா வகுத்துள்ள உத்தி இது.

இப்படி நாற்பது வேட்பாளர்களுக்கு இடமளித்தால், வேட்புமனுத் தாக்கலின் பின்னர் மாவட்டங்களில் அந்த வேட்பாளர்களின் வெற்றியில் ஜனாதிபதி கோட்டாபய கவனம் செலுத்தி, விசேட பிரசாரங்களை முன்னெடுத்து, அவர்களை வெற்றிபெற வைத்துத் தமது கையை பலப்படுத்திக் கொள்வார்

இது மஹிந்தர், பஸில் தரப்புக்கு பிடிக்குமா? ராஜபக்ஷக்கள் இடையேயான இந்தச் சர்ச்சையின் விளைவு என்னவாகும்? அதை அறியவும் நாங்கள் பொறுத்துத்தான் இருக்கவேண்டும்...!

- மின்னல்-

# தற்போதைய நடாளுமன்றின் கடைசி அமர்வு 18,19,20 இல்?

தற்போதைய நடாளுமன்றம் இன்னும் மூன்றே மூன்று நாள்களுக்கே கூடும் வாய்ப்பு இருப்பதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளமை கொழும்பு அரசியலில் அதிக கவனிப்பை ஏற்படுத்தியுள்ளது.

சபாநாயகர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்ஜித் ஆண்டகையைச் சந்தித்து ஆசிபெறச் சென்றார்.

இந்தச் சந்திப்பின் பின் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 18,19,20ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் நடைபெறும். அதன் பின்னர் எப்படி எனத் தனக்குத் தெரியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்தமாதம் 2 ஆம் திகதி தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் நான்கரை ஆண்டுகளைக் கடக்கின்றது. அதன் பின்னர் நாடாளுமன்றை அதன் ஐந்து ஆண்டு பதவிக்காலத்துக்குள் ஜனாதிபதி தாம் விரும்பிய நேரத்தில் எப்போதும் கலைக்க முடியும்.

அதன்படி மார்ச் 2 ஆம் திகதி நள்ளிரவு தற்போதைய நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனால் தற்போதைய நாடாளுமன்றம் இன்னும் மூன்றே மூன்று நாள்கள்தான் - வரும் 18,19,20 ஆகிய தினங்களில்தான் - கடைசியாகக் கூடும் எனக் கூறப்படுகின்றது.

## சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

மேலும் மக்களின் அபிலாஷைகளை உறுதிப்படுத்தும் அரசொன்றை உருவாக்கும் உன்னத முயற்சிக்கு பங்களிப்புச் செய்வதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்தவருடம் ஏப்ரல் மாதமளவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் பொதுத் தேர்தலுக்காக சஜித் தலைமையில் புதிய கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இதனை அடுத்து அந்தக் கூட்டணிக்கு பொதுச் செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டாரவையும் நியமிக்க கடந்த திங்கட்கிழமை கட்சியின் செயற்குழு தீர்மானித்திருந்தது. (ஐ)

## பல்கலை மாணவனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியில் உள்ள அந்த மாணவனின் வீட்டுக்குள் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு நுழைந்த நால்வர், மாணவனை அழைத்துள்ளனர். அவர் அங்கில்லாத நிலையில் வீட்டின் முன் நிறுத்திவைக்கப்பட்டிருந்த காரின் கண்ணாடிகள் மற்றும் ஜன்னல் கண்ணாடிகளை அடித்துச் சேதப்படுத்தி விட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார்விசாரணை செய்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று ஆவா குழு எனத் தம்மை அடையாளப்படுத்தி முகநூல்களில் செயற்பட்டு வரும் இளைஞர்கள் சிலர் தமது முகநூல்களில் தமிழர்கள் அடையாளமாகக் காணப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் நடைபெறும் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் எதிராக எமது நடவடிக்கைகள் இடம்பெறும். அந்த வகையில் சமீபத்தில் நடைபெற்ற மாணவப் பிள்ளைகளுக்கு எதிராக ராக்கிங் மேற்கொள்ளும் நபர் மீது நேற்று முன் தினம் தாக்குதல் நடைபெற்றது.

ராக்கிங் என்ற பெயரில் மாணவர்களுக்கு வேதனை ஏற்படுத்தும் பட்சத்தில் இது போன்ற தண்டனை இனிவரும் காலங்களில் தொடரும். - எனப் பதிவிட்டுள்ளனர். (ஐ-07)

## மேற்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

'சண்டே ஒப்சேவர்' வார இதழின் முன்னாள் ஆசிரியர் தரிஷா பஸ்ரியன் தொடர்பிலும் சுவிஸ் தூதரக விவகாரத்தில் அவருக்கு இருக்கக்கூடிய தொடர்புகள் குறித்தும் பத்திரிகையாளரிடம் விசாரணைகள் இடம்பெற்றன எனவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அனுரங்கி சிங் பல மணி நேரம் விசாரணைக்குட்படுத்தப்பட்டார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனிடையே கொழும்பை மையமாக கொண்ட - தூதரக மட்ட உறவுகளை பேணும் -ஊடகவியலாளர்கள் தொடர்பிலேயே அரசின் பார்வை திரும்பியுள்ளது.

## தமிழகத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதியை செலவிடவில்லை. மத்திய அரசு வடக்கு மக்களை கவனிப்பதில்லை எனக் காட்டவே அவர்கள் முயற்சித்தனர். இதனால், அரசு புத்திசாலித்தனமாக சிந்தித்து. வடக்கில் வறிய மக்களுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடவேண்டும்.

இந்தியாவில் குடியுரிமைச் சட்டம் கொண்டு வந்தபோது, எமது நாட்டின் தமிழர்கள் இந்தியக் குடியுரிமையை கேட்டனர். அப்போது இலங்கையில் தமிழர்களுக்கு தொந்தரவுகள் இல்லை என இந்தியா கூறியது. அப்படிக் கூறி குடியுரிமையை வழங்கவில்லை.

அதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இம்முறை இந்தியாவுக்குச் சென்றிருந்தபோது. இந்தியப் பிரதமர் மோடி 13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் பற்றி கேட்டார். இந்தத் திருத்தச் சட்டம் பெரிய தேவை கருதி கொண்டு வரப்பட்டதல்ல. மோடி இது பற்றி கேட்ட போது எமது பிரதமர் அமைதியாக இருந்தார். அதனைப் பாராட்ட வேண்டும். 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான பிரச்சினையை பலவந்தப்படுத்தித் தீர்க்க முடியாது.

அதேபோல் நாம் மோடியைப் படிக்கவேண்டும். எமது நாடு பிளவுப்படுவதை அவர் விரும்பவில்லை. அவருக்கு தேவை தமிழ் நாட்டின் வாக்குகள். அதற்காகவே அவர் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நினைவுபடுத்துகிறார். அத்துடன் இம்முறை சுதந்திர தினத்தில் தேசிய கீதம் சிங்களத்தில் மட்டும் பாடப்பட்டதன் மூலம் இனவாத தலைவர்களால் தற்போதைய அரசை ஆட்டுவிக்க முடியாது என்பதை வடக்கில் உள்ள அப்பாவித் தமிழ் மக்கள் புரிந்துகொண்டனர். இது அந்த இனவாதிகளுக்கு கிடைத்த பெரிய தோல்வி - என்றார். (ஐ)

## நோயாளியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டில் ஆயுர்வேத மருத்துவர் மொஹமட் அடிதாஸிஸ் மொஹமட் வாகித் என்பவரும் அவருக்கு உதவியாகவும் உடந்தையாகவும் இருந்ததார் என்ற குற்றச்சாட்டில் வைத்தியரின் உதவியாளராக கடமையாற்றிய சிங்கள பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டு திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண் ஒரு சிங்களப் பெண் ஆவார்.

சிகிச்சையின் போது தனக்கு ஒரு திரவம் அருந்த கொடுக்கப்பட்டதாகவும் அதன் பின்னர் போதை நிலை அல்லது மயக்க நிலையில் மருத்துவர் பலாத்காரம் செய்தார் எனவும் அந்தப் பெண் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நோயாளியின் சத்தம் கேட்டு வெளியில் காத்திருந்த அவரது சகோதரியும் மகனும் உள்ளே சென்று பார்த்தபோது வைத்தியரின் குற்றச் செயற்பாட்டைத் தாம் கண்டனர் எனப் பாதிக்கப்பட்டவரின் சகோதரி நீதிமன்றத்தில் சாட்சியம் வழங்கியுள்ளார்.

வழக்கு ஆரம்பிக்கப்பட்டு முடிவுறும் வரையில் ஆயுர்வேத வைத்தியர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி வந்தார்.

இந்தநிலையில் 05.02. 2020 அன்று தீர்ப்பு வழங்கப்படும் என நீதிமன்றம் அறிவித்தது. எனினும் அன்றைய தினம் அவர் தீர்ப்புக்கு முன்னிலையாகாது தலைமறைவாகியுள்ளார்.

அதன் பின்னர் நேற்றுத் தீர்ப்பு வழங்கப்படும் என நீதிமன்றம் அறிவித்திருந்த நிலையில் அந்த வைத்தியரைக் கைது செய்ய அவரது சொந்த ஊரான குருநாகல் பிரதேசத்திற்கு பொலிஸார் சென்ற போது அவர் வீட்டில் இருந்து தலைமறைவாகியுள்ளார்.

வைத்தியரைக் குற்றவாளி எனத் தீர்ப்பளித்த நீதிபதி இளஞ்செழியன் 15 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனையும் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு 10 லட்சம் ரூபா நஷ்ட ஈடு செலுத்த வேண்டும் எனவும் தீர்ப்பளித்தார்.

பெண் உதவியாளருக்கு 5 ஆண்டு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

தலைமறைவாகியுள்ள வைத்திய அதிகாரியை கைது செய்ய விசேட பொலிஸ் குழு அமைத்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கொழும்பு பொலிஸ்மா அதிபர், திருகோணமலை பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும், கைது செய்யும் பிடியாணை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த வைத்தியர் நாட்டை விட்டு வெளியேறாத வகையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## புனாணையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயத்துடன் ஓமனியாமடு பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய மயில்வானம் பிரசாந்தன் என்பவர் சடலமாக மீட்கப்பட்டார். அவரின் சடலத்தின் அருகே உள்ளூர் துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டது.

இவர் கடந்த 25 ஆம் திகதி வீட்டைவிட்டு வெளியேறிய நிலையில் துப்பாக்கி சூட்டு காயத்துடன் சடலமாக மீட்கப்பட்டார். சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இதனையடுத்து இந்த நபர் கொலை செய்யப்பட்ட பின்னர் சடலத்தின் மீது துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கும் மரணச் சான்றறிக்கையை சட்டவைத்திய அதிகாரி பொலிஸாருக்கு வழங்கியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் உயிரிழந்தவரின் மனைவியின் சகோதரியின் கணவரான 31வயதுடைய சொக்கலிங்கம் கோடீஸ்வரன் என்பவரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் வாழைச்சேனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

## தமிழரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிப்பதாகவே இந்த முயற்சியைப் பார்க்கிறோம்.

ஏற்கனவே, தொல்பொருள் திணைக்களம்தான் தமிழர்களின், பூர்வீகம், புராதனம், உள்ளிட்ட அனைத்தையும், மழுங்கடித்து இயங்குகின்ற ஒரு திணைக்களம்.

வடக்கில் பெரியளவில் வேறு புராதனங்கள் இல்லை. கூடுதலாக தமிழ், சைவ இந்துக்களின் புராதன தொல்பொருள் ஆய்வுகள்தான் உள்ளன.

இவற்றை எல்லாம், பாதுகாப்பு அமைச்சின் கீழ், ஒடுக்குவதற்கான செயற்பாடாகவே நாங்கள் பார்க்கலாம்.

வெளிப்படையாக குடியியல் நிர்வாகத்திற்கு உட்பட்ட விடயத்தை பாதுகாப்பு அமைச்சிற்குள்ளே, கொண்டு வருவது பொருத்தமானதல்ல.

ஓர் அச்சுறுத்தல் மூலமாக, தாங்கள் தெரிவு செய்யும் அல்லது தீர்மானிக்கும் விடயத்தை தமிழ் மக்களிடம் திணித்து தமிழ் மக்களின் வரலாற்றை திரிபுபடுத்துவதற்கு எத்தனிக்கும் செயற்பாடாகவே இதைப் பார்க்கலாம் என்றார்.

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவின் ஊடாக குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்களின் கைத்தொலைபேசிகளை சோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பகிடிவதை சம்பவம் தொடர்பில் இதுவரை 8 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு வகுப்புத்தடை விதிப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதேநேரம் கிளிநொச்சி வளாகத்தின் சம்பந்தப்பட்ட சிரேஷ்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்திற்குள் பிரவேசிப்பதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் சம்பந்தனைச் சந்தித்துக் கலந்துரையாடிய ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் நிர்வாக இயக்குநர் பவோலா பம்பலோனி தலைமையிலான குழுவினரே மேற்படி வாக்குறுதியைச் சம்பந்தனிடம் தெரிவித்தனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

இந்தச் சந்திப்பின்போது கடந்த காலங்களில் இலங்கையின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு நடைமுறைகள் தொடர்பில் இரா.சம்பந்தன் தெளிவுபடுத்தினார்.

இலங்கை அரசானது ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகளுக்கு வழங்கிய வாக்குறுதிகள் தொடர்பிலும் அவர் தெளிவுபடுத்தினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்த காலத்தின்போது இந்த வாக்குறுதிகளை இலங்கை அரசு வழங்கியிருந்த போதும் அவற்றை நிறைவேற்றத் தவறியுள்ளமையையும் அவர் சுட்டிக் காட்டினார்.

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் காரணமாக இந்த வாக்குறுதிகள் கைவிடப் படலாகாது என்றும் -

போராட்டம் தமிழ் மக்களினுடையது, எனவே, ஒன்றிணைந்த, பிரிக்கமுடியாத, பிளவுபடாத நாட்டினுள் அதிகாரப் பரவலாக்கல் என்ற தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை சர்வதேச சமூகம் மதிக்க வேண்டும் என்றும் -

இந்தச் சந்திப்பின் போது இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.

இலங்கை அரசு கொடுத்த இந்த வாக்குறுதிகளை சர்வதேச சமூகம் பகிரங்கப்படுத்த வேண்டும் எனவும், இந்த விடயத்தில் சர்வதேச சமூகத்தின் அமைதியானது இலங்கை அரசு இந்த வாக்குறுதிகளில் இருந்து விலகிச் செல்வதற்கு இன்னும் ஊக்கத்தைக் கொடுப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானங்களை இலங்கை அரசு முழுமையாக நிறைவேற்றுவதை சர்வதேச சமூகம் உறுதி செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்திய இரா.சம்பந்தன், விசேடமாக இறுதிக்கட்டப் போரின்போது பாதுகாப்புத் தரப்பினரிடமும் அரச அதிகாரிகளிடமும் தங்கள் உறவினர்களால் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்னும் உண்மை கண்டறியப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

அப்படியானவர்கள் காணாமல் போயிருந்தால் அதற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரிகள் விசாரிக்கப்பட்டு உண்மை உறுதி செய்யப்படல் வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

எமது மக்கள் இந்த உண்மையைக் கண்டுகொள்வதற்காக ஏங்கித் தவிக்கிறார்கள் என்றும், சர்வதேச சமூகம் இந்தக் கருமத்தில் உறுதியாகச் செயற்பட்டு உண்மையைக் கண்டறிய உதவ முன்வரவேண்டும் எனவும் இரா. சம்பந்தன் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கருமங்கள் தொடர்பில் தமது நிலைப்பாடுகள் மிக விரைவில் தாம் எடுக்கும் தீர்மானங்கள் மூலம் வெளிப்படும் என ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் இதன்போது வாக்குறுதியளித்தனர்.

-இவ்வாறு மேற்படி சந்திப்பை ஒட்டி வெளியிடப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## சமுதாயச் சீற்றம் அவசியம்

*"மற்றவர்களுக்குத் தீமை அளிக்கக் கூட நினைக்காத நமது சமூகம் இன்று தீமையை நோக்கிச் செல்வதைப் பார்க்கும்போது எனக்கு மிகுந்த மனக் கவலையாக இருக்கின்றது."*

– இப்படி வேதனையும் விசனமும் தெரிவித்திருக்கின்றார் வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் அம்மையார்.

உண்மைதான். சமூகச் சிற்பிகள் வேதனைப்பட வேண்டிய – விசனப்பட வேண்டிய – ஒரு நிலையை நோக்கித்தான் நமது சமூகம் சென்று கொண்டிருக்கின்றது. சமூகப் பிறழ்வுகளை யார் திருத்துவது, எப்படித் திருத்துவது என்று தெரியாமல் அந்தரிக்கும் நிலைமையில் நாம் இருக்கின்றோம்.

கடும் யுத்தத்துக்கும், மோசமான பேரிழப்புகள், போரிழப்புகள் போன்றவற்றுக்கு மத்தியிலும் சமூக விழுமியங்களைப் பேணி நின்ற இனம் எங்களுடையது. அதனைப் பெருமையாய் உரைக்கும் சிறப்பு மிக்கவர்களாக நாம் விளங்கினோம்.

கொடூர யுத்த காலத்தில் நள்ளிரவில் – நடுநிசி இருட்டில் – வீதிகளில் விளக்குகளோ வீடுகளுக்கு மின்சாரமோ இல்லாத காலத்தில் – வீதிகளில் நகைகளுடன் நமது இளம் பெண்கள் நடமாட முடிந்தது.

கல்விக்கான அடிப்படை வாய்ப்புக்கள் கூட இல்லாத சமயத்தில் – மின்சாரத்தில் இருந்து படிப்பதற்கான மேசை, கதிரைகள், கொப்பி, புத்தகங்கள் வரைப் பற்றாக்குறையாக இருந்த காலத்திலும் கூட – எமது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கல்வியில் முன்னணியில்தான் இருந்தன.

இலங்கையின் நீதித்துறையும், சட்டமும் ஒழுங்கும் இங்கு செல்லுபடியற்ற காலத்திலும் இங்கு ஒழுக்கமும், அமைதியும், நேர்மைப் பண்பியல்புகளும் பேணப்பட்டன. பாலியல் கொடூரங்களால் சமூகம் சீரழியவில்லை.

ஆனால், வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக் காட்டுகின்றமை போன்று இன்று நிலைமை மோசமாகித்தான் விட்டது.

வசதிகளும், வாய்ப்புகளும் பெருகி விட்டன. தொழிநுட்ப உதவிகளும், திறன்களும் விருத்தி பெற்று விட்டன. அவற்றுடன் குற்றங்களும் வக்கிரங்களும் இறக்கை கட்டிப் பறக்க ஆரம்பித்து விட்டன என்பதுதான் வேதனையிலும் வேதனை.

கொடூரங்களைக் கண்டு கொதித்தெழுந்தது நமது சமூகம். நீதி, நியாயங்களுக்காகச் சிலிர்த்துக் கொண்டு நின்றது எமது இனம்.

அஹிம்சை பாதையில் – காந்தீய நெறியில் – வன்முறைகளற்ற அறவழியில் – தனது உரிமைக்காகப் போராடிய நமது இனம், அந்தப் போராட்டங்கள் இனக் கலவர வெறியாட்டங்கள் மூலமும், ஆயுதப் படைகளின் வன்முறைக் கொடூரங்கள் வாயிலாகவும், பேரினவாதச் சட்டங்களாலும் அடக்கப்பட்ட போதே 'முள்ளை முள்ளால் எடுக்கும்' தந்திரோபாயத்தைப் பின்பற்ற வேண்டிய இக்கட்டுக்குள் – கட்டாயத்துக்குள் – தமிழினம், குறிப்பாகத் தமிழ் இளைஞர் சமூகம் தள்ளப்பட்டது.

அடக்குமுறைக்கு – ஒடுக்கு நடவடிக்கைகளுக்கு – எதிராக சீறி எழுந்த இனம் நமது. அநீதிக்கு எதிராகச் சிலிர்த்துக் கொண்டு கிளம்பியவர்கள் நாங்கள்.

சமூகப் பிறழ்வுகளுக்கு எதிராகவும் இன்று அதேபோன்று அறச் சீற்றம் – நீதி வேண்டிய எழுச்சி – அவசியமாகின்றது என்று நினைக்கின்றோம்.

சேற்றை அகற்றுவதற்கு சேற்றுக்குள் இறங்க வேண்டியது போன்ற ஒரு தேவை நேர்ந்திருப்பதாகத் தோன்றுகின்றது.

வழமையாக வீடு புகுந்து அடாவடித்தனம் பண்ணுதல், அட்டகாசம் புரிதல், வாள் வெட்டுக் கலாசாரம், கும்பல் தாக்குதல்கள் போன்றவை குறித்து சமூகத்தில் எரிச்சலும், சீற்றமும், விசனமும் தெரிவிக்கப்படுகின்றமையைக் காண்கின்றோம். இவை தொடர்பில் நடவடிக்கை எடுக்க இயலாத இலாயக்கற்ற நிலையில் இருக்கும் காவல்துறை குறித்து சீறுகின்ற பொதுமக்களைத் தினசரி சந்திக்கின்றோம்.

ஆனால், பகிடிவதை என்ற பெயரில் பாலியல் கொடூரம் வரை குற்றங்கள் அரங்கேறுகின்றன என்ற தகவலை அறிந்து, நெஞ்சம் கனன்று கொண்டிருந்த தமிழ் மக்கள் மத்தியில், அத்தகைய குற்றத்துக்காக சந்தேகத்தின் பேரில் பல்கலைக்கழகத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்ட ஒரு சிரேஷ்ட மாணவனின் இல்லத்தின் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தினர் என்ற செய்தி வேறு விதமாகப் பார்க்கப்படுகின்றது.

அந்தப் பாலியல் கொடூரப் பகிடிவதை தொடர்பில் இன்னும் முறையான – சரியான – விசாரணைகள் நடைபெறவில்லை. சம்பந்தப்பட்ட சிரேஷ்ட மாணவர் அக்குற்றத்தை இழைத்தாரா என்பதும் கூட இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆனால், அவரின் வீடு தேடிச் சென்று தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. பல்கலைக்கழக சமூகத்துக்குள் ஒளிந்திருந்து கொண்டு பகிடிவதை என்ற கொடூரத்தைத் தொடரும் மனவக்கிரப் புத்திக்காரர்கள் இப்படித்தான் கையாள வேண்டும், அவர்கள் இழைக்கும் இத்தகைய அடாவடிக் குற்றம் அவர்கள் வீடு தேடி வந்து, பெற்றோர், உற்றாரையும் கூடத் தீண்டும் என்ற தண்டனை அவசியமானது, தவிர்க்க முடியாதது என்ற சிந்தனை – எண்ணம் – சமூகத்தில் பிறப்பெடுத்திருக்கின்றது என்பதையே இது துலாம்பரப்படுத்துகின்றது.

இத்தகைய வக்கிரப்புத்திக்காரர்களைக் கட்டுப்படுத்துவதற்கு அராஜக வன்முறை பயன்படுத்தப்படுவது ஓரளவு நியாயம்தான் என்ற சிந்தனை ஓட்டம் – வெளிப்பாடு – சமூகத்துக்கு நேர்ந்திருப்பது துரதிஷ்டவசமானது. இத்தகைய மோச நிலைக்கு சமூகத்தை நெட்டித் தள்ளியிருக்கும் இந்தப் பகிடிவதை வக்கிரப்புத்திக்காரர்கள் இந்தச் சூழலைப் புரிந்து கொண்டு இனியாவது அவற்றை அடியோடு கைவிட்டுத் திருந்த வேண்டும்.

# கூட்டணியின் இணைத் தலைமைத்துவத்தை மைத்திரி ஒருபோதும் கோரவே இல்லையாம்!

## இப்படிக் கூறுகின்றார் அரசுப் பேச்சாளர் கெஹெலிய



கொழும்பு,பெப்.13

பொதுத்தேர்தலுக்கான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உத்தேசக் கூட்டணியின் இணைத் தலைவர் பதவியை முன்னாள் ஜனாதிபதியும் சு.க. தலைவருமான மைத்திரிபால சிறிசேன கோரவில்லை.

இரு தரப்பினருக்குமிடையில் பிளவை ஏற்படுத்தவே இவ்வாறான சோடிக்கப்பட்ட கருத்துக்கள் பகிரப்படுகின்றன என்று தெரிவித்த அரசாங்கத்தின் பேச்சாளரும் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல, பதவி காலம் முடிந்ததும் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவார் எனக் குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுத்தேர்தலில் பொலனறுவை மாவட்டத்தில் போட்டியிட போவதாக குறிப்பிடுகின்றார் எனச் சொன்னார். அவ்வாறாயின் 2015ம் ஆண்டு தாம் குறிப்பிட்ட விடயங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்ட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இடம் பெறவுள்ள பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அமைக்கவுள்ள உத்தேச கூட்டணியில் இணைத்தலைவர் பதவி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்பட வேண்டுமென கூறுவது சோடிக்கப்பட்ட ஒன்று. சுதந்திர கட்சியினரிடமிருந்தோ, அல்லது அக்கட்சின் தலைவரிடமிருந்தோ அவ்வாறான எந்தவொருக் கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக்கொண்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தான் பொலன்னறுவையிலிருந்து ஆட்சி செய்யப்போவதாகக் கூறினார். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. மேலும் தான் மீண்டும் அரசியலுக்கு வரப்போவதில்லை எனவும் அந்நிகழ்வில் மைத்திரி அறிவித்திருந்தார்.

இந்நிலையில் மீண்டும் சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபா சிறிசேன அரசியலுக்கு வந்தால் அன்று தான் அறிவித்திருந்தது தவறெனவும் அரசியலுக்கு மீண்டும் வரக்கூடாதென தனக்கிருந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டதாகவும் மைத்திரிபால சிறிசேன கூற வேண்டும். – என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

# சஜித்தின் சின்னம் இறுதி முடிவு நாளை

கொழும்பு, பெப். 13

சஜித் பிரேமதாஸ தலைமையில் உருவாகும் முன்னணியின் சின்னம் தொடர்பில், நாளை நடைபெறும் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமித் சஞ்சய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய முன்னணியின் சின்னம் தொடர்பில் செயற்குழுவில் பேசப்பட்டது. ஆனபோதும் இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. தொடர்சியாகக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. விசேடமாக இன்று அல்லது நாளை கலந்துரையாடல் இடம்பெறவிருக்கின்றது. அதிலே நாம் இறுதித் தீர்மானத்தை எடுக்கவிருக்கின்றோம்.

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கூடித் தேர்தலுக்கான அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய கூட்டணியை அமைப்பதற்கான அதிகாரத்தை சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கியிருக்கின்றது. அதுபோன்று அதன் தலைவர் பொறுப்பையும் அவரிடம் கொடுத்திருக்கின்றது.

எனவே அவர் விரும்பியதைப் போன்று முன்னணிக்கு பெயரிட்டு அமைத்துக் கொள்ள முடியும். அதற்கான அங்கீகாரத்தைச் செயற்குழு வழங்கியிருக்கின்றது.

சின்னம் தொடர்பில்தான் தற்போது பிரச்சினை இருக்கின்றது. நாளை நடைபெறும் செயற்குழுக் கூட்டத்திலே சின்னம் தொடர்பிலான இறுதித்தீர்மானம் எடுக்கப்படும் – என்றார். (ஐ)

# உயர்ந்த ஊடகக் கலாசாரத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் ஊடகத் துறைக்கான பல்கலைக்கழக கல்வியல் கல்லூரி!

## விரைவில் ஆரம்பம் என அமைச்சர் பந்துல தகவல்



ஊடகவியலாளர்களுக்கு உயர்ந்த ஊடகக் கலாசாரத்தை ஏற்படுத்துவதற்காகப் பல்கலைக்கழக கல்வியல் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்படவிருப்பதாக தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், உயர்கல்வி, தொழிநுட்ப புத்தாக்க அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரச – தனியார் ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்றுக் காலை அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரச ஊடகங்களுக்கு சேறு பூசும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ, தனிப்பட்டவர்களின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கவோ இடமளிக்கப்பட மாட்டாது என்று தெரிவித்த அமைச்சர், சிறந்த ஊடகக் கலாசாரத்திற்கான ஊடகப் பரப்பைச் சரியான முறையில் பயன்படுத்துமாறு ஊடகவியலாளர்களிடம் கேட்டுக்கொண்டார்.

உயர்தரத்தில் சித்தியடைந்த சகல மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கான வாய்ப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். உயர்தரத்தில் சித்தியடைந்த அனைவருக்கும் பல்கலைக்கழக வாய்ப்பை வழங்கும் சவாலை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது.

பகிடிவதையினால் பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கு மீண்டும் பல்கலைக்கழகத்திற்கான வாய்ப்பை வழங்குவதற்கான சந்தர்ப்பம் பற்றியும் கண்டறியப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

## நாளை 14.02.2020 – வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: சித்திரை பி.ப. 01.05 வரை
திதி : ஷஷ்டி பி.இ. 12.25 வரை
இராகுகாலம் : 11.03 – 12.33
சுப நேரம் : 06.33 – 08.03

# சஜித்தின் இதயத்தால் மாற்றம் ஏதும் வராது!

**சொல்கிறார் உதய கம்மன்பில**



கொழும்பு, பெப். 13

சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணியினர் 'இதயம்' சின்னத்தில் களமிறங்குவதால் எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை. ஏனெனில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே மக்களின் இதயங்களை வென்றுவிட்டனர். – என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள குழுவொன்றுக்குக் காலம் கடந்த ஞானம் பிறந்துள்ளது. பொதுத்தேர்தலில் இதயம் சின்னத்தில் போட்டியிடப் போகிறார்கள் என சஜித் பிரேமதாஸவும் அவரின் சகாக்களும் அறிவித்துவருகின்றனர். இந்த யுக்தி எடுபடாது.

ஏனெனில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் ஏற்கனவே மக்கள் மனங்களை வென்றுவிட்டனர். எனவே, பொதுத்தேர்தல் முடிவு வெளியான பின்னர் சஜித்துக்கு மென்மேலும் கவலைப்படவேண்டி ஏற்படும்.

சஜித் அணியின் சின்னம் மட்டுமே மாறுகின்றது. அவர்களின் எண்ணங்கள் ஒருபோதும் மாறா. புதிய போத்தலில் பழைய வைனை ஊற்றிவிட்டு புதிது என காட்டி ஏமாற்றுவதுபோல்தான் மக்களை ஏமாற்றுவதற்கு முயற்சிக்கின்றனர் – என்றார். (ஐ)

# அரசியலில் நான் ஈடுபடமாட்டேன்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப். 13

அரசியலில் நான் ஈடுபடப் போவதில்லை. முரண்பாட்டு அரசியல் செய்வதற்கும் நான் இங்கு வரவில்லை. எமது மக்களுக்குச் சேவையாற்றவே வந்திருக்கிறேன்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எச்.எம். சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழிலுள்ள மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாண ஆளுநராக பல சவால்களுக்கு மத்தியில் நியமிக்கப்பட்டிருந்தேன். அதாவது ஆதரவு, எதிர்ப்புக்கள், போட்டிகள் எனப் பல இருந்தும் நான் ஆளுநராக நியமிக்கப்பட்டேன். அவ்வாறு நான் ஆளுநராக இங்கு வந்ததன் நோக்கமே வடக்கு மக்களுக்கு என்னாலான சேவைகளைச் செய்ய வேண்டுமென்பதற்காகத் தான்.

ஆகவே அத்தகைய சேவைகளைச் செய்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு அனைவரதும் ஒத்துழைப்பும் ஆதரவும் இருந்தால் இந்த மாகாணத்திலுள்ள மக்களின் வாழ்வை மேம்படுத்துகின்ற பல்வேறு நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியுமென்று நம்புகின்றேன்.

ஆகையினால் இங்குள்ள ஒவ்வொருவரும் சிறந்த மனப்பாங்குடன் வேலைகளைச் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறேன். மேலும் தேவையில்லாத விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள் சுமத்துவதைத் தவிர்க்க வேண்டும். அவை தொடர்பில் ஆராய்ந்து உண்மையை வெளிப்படுத்தவேண்டும். அத்தோடு அவ்வாறான விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள் என்பன ஆரோக்கியமானவையாக இருக்கவேண்டும்.

நாம் அனைவரும் ஒரே பாதையில் பயணித்து ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அத்தகைய ஆரோக்கியமான, சிறந்த சமுதாயத்தை உருவாக்கி அனைவரதும் வாழ்வை வளப்படுத்துகின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இத்தகைய சேவைகளைச் செய்வதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன்.

மக்களுக்கான சேவை செய்ய வேண்டுமென்பதே எனது நோக்கமாக உள்ளது. அதனை விடுத்துப் பிரபலமாக வேண்டுமென்ற எந்தத் தேவையும் எனக்கு இல்லை. நான் அரசியலில் ஈடுபடப் போவதில்லை. முரண்பாட்டு அரசியல் செய்வதற்கும் இங்கு நான் வரவில்லை. உண்மையாகவே மக்களுக்கான சிறந்த சேவையை மேற்கொள்வதற்கே வந்திருக்கிறேன். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்க வேண்டும் – என்றார். (ஐ)

# பரீட்சைகளுக்கு இணையமூலம் விண்ணப்பம்!

கொழும்பு, பெப். 13

க.பொ.த சாதாரணதர, உயர்தர மற்றும் தரம் ஐந்து பரீட்சைகளுக்கு இணையத்தில் விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வருடம் முதல் இந்த இலகு முறை நடைமுறைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் மக்களுக்கான சேவைகள் பல இலகுபடுத்தப்பட்டு வரும் நிலையில் இந்தப் பரீட்சைகளுக்கு இணையவழி விண்ணப்ப முறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# ஐ.தே.கவில் இருந்துகொண்டே அரசியல் வேலை செய்வோம்

**ரஞ்சித் மத்துமபண்டார திட்டவட்டம்**



கொழும்பு, பெப். 13

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து தான் நாங்கள் எமது அரசியல் வேலைகளைச் செய்வோம். எங்களை அங்கிருந்து விரட்ட முயற்சித்தாலும் நாங்கள் வெளியேறமாட்டோம். அரசியல் கூட்டணியின் தலைவராகச் செயலாளராக எங்களை நியமித்தால் நாங்கள் செயற்பட இடமளிக்கவேண்டும். எமது கட்சிச் சின்னமல்ல முக்கியம். எண்ணமே முக்கியம். சஜித்தின் பெயரைப்பயன்படுத்தி அரசியல் நன்மையடையச் சிலர் முயற்சிக்கின்றனர்.

–இவ்வாறு கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் ரஞ்சித் மத்துமபண்டார எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய அரசியல் கூட்டணியின் சின்னம் தொடர்பான பிரச்சினை எழுந்துள்ளது. ஆனால் அந்தப் பிரச்சினையை வைத்து எமது செயற்பாடுகளை நாம் நிறுத்தி விடமுடியாது. கட்சியின் செயற்குழுவில் எடுத்த தீர்மானத்துக்கு முரணாக அகில விராஜ் கருத்து கூறியுள்ளார். யானைச் சின்னத்தில் போட்டியிடுவது குறித்து அன்று எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஐ.தே.கவிலிருந்து இந்தக் கூட்டணியில் பதவி எடுப்பது ஒரு சிக்கலான விடயமல்ல. கடந்த வருடம் ரணிலின் பெயரும் இடப்பட்டதே. மைத்திரிபால சிறிசேன சுதந்திரக்கட்சியில் இருந்து கூட்டணியில் போட்டியிட்டாரே ? அப்படித்தான் இதுவும். சின்னம் என்ற சர்ச்சையை வைத்துக் கூட்டணியை சிதறடிக்க இடம் கொடுக்க முடியாது – என்றார். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.13

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

வேம்பிராய், கனகம்புளியடி சந்தி, சரசாலை ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில்-**

பகல அளுத்வத்த கிராமம், கூமாங்குளம் கிராமம், சாம்பல்தோட்டம், இலுப்பைக்குளம். மதவுவைத்தகுளம் கிராமம் ஆகிய இடங்களிலும்–

**மன்னார்ப் பிரதேசத்தில் -**

பெரியதம்பனையிலிருந்து மடு வரைக்கும், மடுநீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின்தடை இருக்கும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# மனைவி தாக்கி கணவன் சாவு!

கொழும்பு, பெப். 13

தெஹிவளை – நெதிமால பிரதேச வீடு ஒன்றின் முன்னால் வெட்டுக் காயங்களுடன் வீழ்ந்திருந்த நபர் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

35 வயதுடைய அந்த நபர், நேற்று முன்தினம் இரவு வீட்டின் முன்னால் விழுந்து கிடந்தார் என்றும், அவர் நெதிமால பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மனைவியுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டைத் தொடர்ந்து அவரது மனைவி கொடூரமாகத் தாக்கியுள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

## நான்கரை லட்சம் கழிவறைகள் மத்தியப் பிரதேசத்தில் மாயம்!



வடிவேலுவின் கிணற்றைக் காணோம் என்ற கொமெடியைப் போல, மத்திய பிரதேசத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கட்டப்பட்டவை எனக் கூறப்படும் நான்கரை லட்சம் கழிவறைகள் காணாமல் போய்விட்டன எனப் புகார் எழுந்துள்ளது.

வறுமைக் கோட்டுக்கு சற்று மேலே இருக்கும் 62 லட்சம் குடும்பங்களுக்கு கழிவறைகளை கட்டிக் கொடுக்கும் பணி கடந்த 2012 இல் தொடங்கப்பட்டது. அதன் பின்னர் நடத்தப்பட்ட முதல்கட்ட சோதனையில் சுமார் நான்கரை லட்சம் கழிவறைகள் கட்டப்படாமல் கணக்கு காட்டப்பட்டிருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டு சுமார் 540 கோடி ரூபா ஊழல் அம்பலமாகி உள்ளது. இதை அடுத்து அடுத்த கட்ட சோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கழிவறைகளைக் கட்ட ஊராட்சிகள் வழியாகவும், பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகவும் அரசு பணத்தை செலுத்தியது. அதில் அதிகாரிகளின் உதவியுடன் இடைத்தரகர்களோ, உள்ளூர் அரசியல் தலைவர்களோ ஊழல் செய்திருக்கலாம் என கூறப்படுகிறது. பல வீடுகளில் உரிமையாளருக்குத் தெரியாமலேயே கழிவறைகள் கட்டப்பட்டதாகக் காட்டப்பட்டுள்ளனவெனவும், பக்கத்து வீட்டு கழிவறைகள், 2012க்கு முன்னர் கட்டப்பட்ட கழிவறைகள் ஆகியவற்றை புகைப்படம் எடுத்து மோசடி நடந்துள்ளதும் எனவும் கூறப்பட்டுள்ளது.

# டெல்லி முதல்வராக கெஜ்ரிவால் 16ஆம் திகதி பதவியேற்கின்றார்

## 70 தொகுதிகளில் 62 இல் அவர் கட்சி வெற்றி

டெல்லி முதலமைச்சராக ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் வரும் 16,ஆம் திகதி மீண்டும் பதவியேற்கவுள்ளார்.

டெல்லி சட்டப்பேரவையில் உள்ள 70 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று முன்தினம் எண்ணப்பட்டன. இதில் மாநிலத்தை ஆளும் ஆம் ஆத்மி கட்சி 62 தொகுதிகளில் அமோக வெற்றி பெற்றது.

எதிர்க்கட்சியான பா.ஜ.க. ஆக 8 தொகுதிகளில் வென்றது. மற்றோர் எதிர்க்கட்சியான காங்கிரஸுக்கு கடந்த தேர்தலை போல இந்தத் தேர்தலிலும் ஒரு தொகுதி கூடக் கிடைக்கவில்லை.

புதுடெல்லித் தொகுதியில் போட்டியிட்ட கெஜ்ரிவாலுக்கு 46 ஆயிரத்து 526 வாக்குகள் கிடைத்தன. அவருக்கு அடுத்து பா.ஜ.க. வேட்பாளர் சுனில் குமார் யாதவுக்கு 24,876 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. இதன்மூலம் 21,697 வாக்குகள் வித்தியாசத்தில் கெஜ்ரிவால் வெற்றி பெற்றார்.

பார்ப்பார்காஞ்ச் தொகுதியில் போட்டியிட்ட துணை முதலமைச்சர் மணிஷ் சிசோடியா, பா.ஜ.க. வேட்பாளர் ரவி நெகியை காட்டிலும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.



சட்டப்பேரவைத் தேர்தலில் பெற்ற அமோக வெற்றியின்மூலம், டெல்லியில் தொடர்ந்து 3ஆவது முறையாக ஆம் ஆத்மி கட்சி ஆட்சியமைக்கிறது. இந்நிலையில் டெல்லி முதலமைச்சராக வரும் 16 ஆம் திகதி கெஜ்ரிவால் பதவியேற்க இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


டெல்லியில் உள்ள ராம்லீலா மைதானத்தில் பதவியேற்பு விழா நடைபெறவுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விழாவில் பங்கேற்க நாடு முழுவதும் உள்ள முக்கிய தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நிலவுக்குச் செல்லும் இந்திய வீரர்களுக்கு பயிற்சி தொடங்கியது

நிலவுக்கு மனிதனை அனுப்பும் இந்தியாவின் ககன்யான் திட்டத்தில் பங்கேற்கும் 4 பேருக்கான 12 மாதகால பயிற்சி ரஷ்யாவில் தொடங்கியது.

2022 இல் மேற்கொள்ளப்படவுள்ள இந்தப் பயணத்திற்காக இந்திய விமானப் படையின் போர் விமானிகள் 4 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி மொஸ்கோவில் உள்ள ககாரின் விண்வெளி வீரர்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் (Gagarin Research & Test Cosmonaut Training Center (GCTC) தொடங்கியுள்ளதாக ரஷ்ய விண்வெளி ஆய்வு நிறுவனமான ரஷ்காஸ்மோஸ் (Roscosmos) தெரிவித்துள்ளது.

ஒருவருடம் நீடிக்கும் இந்த பயிற்சியின் போது பயோமெடிக்கல் டிரெயினிங், உடற்திறன் மேம்பாடு உள்ளிட்ட முழுமையான பயிற்சி அளிக்கப்படும். சிறப்பு 76 னிம்லு விமானத்தில் புவியீர்ப்பு இல்லாத எடை இழப்பு நிலை குறித்த குறுகிய காலப் பயிற்சியும், நிலவில் அசாதாரண நிலையில் இறங்க நேர்ந்தால் சமாளிக்க வேண்டிய பயிற்சியும் வழங்கப்படும்.



## குஜராத்தில் 70 லட்சம் பேர் திரண்டு டிரம்ப்பை வரவேற்க பெரும் ஏற்பாடு!



இந்தியா வரும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பை குஜராத்தில் சுமார் 70 லட்சம் பேர் திரண்டு வரவேற்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற பிறகு, டிரம்ப் தனது மனைவி மெலனியாவுடன் முதல் முறையாக இம்மாதம் 24, 25 ஆம் திகதிகளில் இருதினங்கள், குஜராத், டெல்லியில் சுற்றுப்பயணம் செய்கிறார்.

குஜராத் பயணத்தின்போது அகமதாபாத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் அமரக்கூடிய வகையில் சுமார் 700 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பிரமாண்ட கிரிக்கெட் மைதானத்தை பிரதமர் மோடியுடன் சேர்ந்து அவர் திறந்து வைக்கவுள்ளார். இந்த மைதானமானது, ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தை விட மிகப்பெரியதாகும். மேலும் உலகிலேயே மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமாகும்.

இதன்பின்னர் மைதானத்தில் நடைபெறவுள்ள கெம் சோ டிரம்ப் (Kem cho trump) கூட்டத்தில், பல்லாயிரக்கணக்கானோர் மத்தியில் மோடியுடன் சேர்ந்து டிரம்ப் உரை நிகழ்த்துவார் எனக் கூறப்படுகிறது.

பின்னர் சபர்மதி நதி முகத்துவாரத்தில் பிரதமர் மோடி, அதிபர் டிரம்ப் ஆகியோர் இடையே பேச்சுவார்த்தை நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அப்போது அமெரிக்காவிடம் இருந்து இந்திய மதிப்பில் 14 ஆயிரத்து 239 கோடி ரூபாய் மதிப்பில் (இருநூறு கோடி டொலர்) நாசாம்ஸ் (Nasams) வான்பாதுகாப்பு சாதனத்தை வாங்குவது தொடர்பான ஒப்பந்தம், 18 ஆயிரத்து 510 கோடி ரூபாய் மதிப்பில் (260 கோடி டொலர்) கடற்படை ஹெலிக்கொப்டர் வாங்குவது தொடர்பான ஒப்பந்தம் உள்ளிட்ட ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படலாம் எனக் கூறப்படுகிறது.

இந்திய சுற்றுப்பயணம் குறித்து ஓவல் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், மோடியை தனது நண்பர் என்றும், சிறந்த நற்பண்புகளை கொண்ட நல்ல மனிதர் என்றும் பாராட்டினார்.

மோடியுடன் வார இறுதியில் தொலைபேசியில் பேசியதாகவும், அப்போது விமான நிலையத்தில் இருந்து மைதானம் வரையிலும் 50 லட்சம் பேர் முதல் 70 லட்சம் பேர் வரைத் திரண்டு தமக்கு வரவேற்பு அளிப்பார்கள் என மோடி கூறினார் எனவும் டிரம்ப் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இந்தியாவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வீர்களா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, இந்தியா ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்புவதாகவும், ஒப்பந்தம் சரியான முறையில் உருவாக்கப்படும் பட்சத்தில், அதை அமெரிக்கா நிச்சயம் செய்து கொள்ளும் என்றும் கூறினார்.

## ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் எழுவர் விடுதலை பற்றி ஆளுநரிடம் முறையிடுக!

### தமிழக அரசுக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தல்




ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள 7 பேரை விடுதலை செய்வதற்கான தீர்மானம் குறித்து ஆளுநரிடம் முறையிடுமாறு தமிழக அரசுக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

7 பேரை விடுதலை செய்ய தமிழக சட்டப்பேரவையில் கடந்த 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 ஆம் திகதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், இது வரை ஆளுநர் அந்தத் தீர்மானத்துக்கு ஒப்புதல் அளிக்கவில்லை. இந்த நிலையில் பேரறிவாளன் மனு மீதான விசாரணை நீதிபதி நாகேஸ்வர ராவ் அமர்வு முன் வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் 7 பேர் விடுதலை விவகாரத்தில் ஆளுநருக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியாது என்றும், ஆளுநருக்கு நீதிமன்றத்தால் நேரடி அழுத்தம் கொடுக்க முடியாது என்றும் கூறினர்.

ஏழு பேர் விடுதலை குறித்த கோப்பு ஆளுநர் முன்பு ஏன் இத்தனை மாதம் நிலுவையில் உள்ளது எனக் கேள்வி எழுப்பிய நீதிபதிகள், விசாரணையை 2 வாரத்துக்குத் தள்ளி வைத்தனர்.

காலைக்கதிர்
Kalaikathir



# வெட்டுக்கிளிப் படையெடுப்பை கட்டுப்படுத்தாவிடில் பேரழிவு!

## கடுமையாக எச்சரிக்கின்றது ஐ.நா.

ஆப்பிரிக்காவில் வெட்டுக்கிளிகள் மேற்கொண்டுள்ள படையெடுப்பைஜ் கட்டுப்படுத்தாவிடில் பேரழிவைச் சந்திக்க நேரிடும் என ஐ.நா. எச்சரித்துள்ளது.



நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் உரையாற்றிய உணவு மற்றும் வேளாண் அதிகாரி கீத் க்ரெஸ்மேன்(Keith Cressman), உள்நாட்டு போரால் ஏற்கனவே உணவுத் தட்டுப்பாட்டை சந்தித்து வரும் சூடான் நோக்கி வெட்டுக்கிளி படை நகர்ந்து கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார். பென்சில்வேனியா, நியூயோர்க், நியூஜெர்சியில் உள்ள மொத்த மக்களுக்குத் தேவையான ஒரு வேளை பயிர்களை இந்த வெட்டுக்கிளி கூட்டம் ஒரே நாளில் தின்று சேதப்படுத்தக்கூடியவை என்றும், இதனால் ஆபிரிக்க நாடுகளில் உணவுத் தட்டுப்பாடு தீவிரமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் ஐ.நா. அதிகாரி கீத் தெரிவித்துள்ளார்.

மழைக்குப் பிறகு இந்த வெட்டுக்கிளிகளின் எண்ணிக்கை பன்மடங்காக அதிகரிக்கக்கூடும் என்பதால் துரிதகதியில் நடவடிக்கை தேவை என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல் 4 ராணுவத்தினர் உள்பட 6 பேர் பலி!

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தீவிரவாதிகள் நடத்திய கொடூரமான தற்கொலைப் படைத் தாக்குதலில் நான்கு இராணுவ வீரர்கள் உள்பட ஆறு பேர் உயிரிழந்தனர்.


கடந்த ஆறுமாத காலமாக இத்தகைய தாக்குதல் நடக்கவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இங்குள்ள மார்ல் ஃபாஹிம் இராணுவப் பயிற்சிப் பல்கலைக் கழகத்தின் வளாகத்தில் திடீரென தீவிரவாதிகள் நேற்று முன்தினம் இரவு தாக்குதல் தொடுத்தனர். இத்தாக்குதலுக்கு மத்திய வெளியுறவு அமைச்சகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இந்தியா தனது இரங்கலை வெளிப்படுத்தியுள்ளது.



# விண்வெளிக்கு அப்பால் இருந்து வரும் மிக மர்மமான வானொலி சமிக்ஞைகள்



விண்வெளிக்கு அப்பால் இருந்து மர்மமான வானொலி சமிக்ஞைகள் வருவதை வானியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

எவ்.ஆர்.பி. எனப்படும் அதிவேக வானொலி அலைவரிசைகள் ஆற்றல் மிக்கனவாக வருகின்றன என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இத்தகைய வானொலி சமிக்ஞைகள் 50 கோடி ஒளி ஆண்டு தொலைவில் இருந்து வருகின்றன எனவும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

முன்னதாக கடந்த 2018 செப்டம்பர் மற்றும் 2019 அக்டோபர் மாதங்களில் கனடாவில் செயல்பட்டு வரும் விண்வெளி ஆய்வு மையம் ஒவ்வொரு 16 நாள்களுக்கு ஒரு முறை இது போன்ற அதிவேக வானொலி சமிக்ஞைகள்வருகிறமையையும் அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்த நிலையில் விண்வெளியில் இருந்து புதிதாக 8 ரக வானொலி சமிக்ஞைகள் வருகின்றமையையும் கண்டுபிடித்துள்ள வானியல் ஆய்வாளர்கள், இத்தகைய சமிக்ஞைகள் எங்கிருந்து வருகின்றன என்பது குறித்தும் ஆராய்ந்து வருகின்றனர்.

# வழக்கறிஞர்களும் மருத்துவர்களும் பிரான்ஸில் வீதிகளுக்கு இறங்கினர்

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் அரசுக்கு எதிராக வழக்கறிஞர்களும் மருத்துவர்களும் வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்தினர்.

அதிபர் இம்மானுவேல் மக்ரோனின் ஓய்வூதியச் சீர்திருத்தங்களைக் கண்டித்து, கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் பல்வேறு தரப்பினர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில், புதிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பலன் பெறுவதற்கான வயது வரம்பு உயர்த்தப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து நூற்றுக்கணக்கான வழக்கறிஞர்களும் மருத்துவர்களும் பிரம்மாண்ட பேரணி நடத்தினர். அரசின் நடவடிக்கை ஜனநாயக விரோதமானது என்றும்வர்கள் கோமிட்டனர்.




# சிரியாவில் படையின் ஹெலியை சுட்டு வீழ்த்திய போராளிகள் குழு

## விமானி, துணை விமானி பலி



சிரியாவில் அரசுப் படையின் ஹெலிக்கொப்டர் ஒன்றைப் போராளிக் குழுவினர் சுட்டு வீழ்த்தி உள்ளனர்.

ரஷ்யத் தயாரிப்பான எம்.ஐ.17 ரக ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்று இட்லிப் நகரின் மேற்பரப்பில்பறந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தது.

அப்போது மறைந்திருந்த கிளர்ச்சியாளர்கள் ஹெலிக்கொப்டரைக் குறி வைத்துத் தாக்கினர். இதில் தாக்குதலுக்கு உள்ளான அந்த ஹெலிக்கொப்டர் தீப்பிழம்புகளுடன் வானில் கட்டுப்பாடற்றுச் சுற்றிச் சுழன்றது.

பின்னர் சிறு சிறு துண்டுகளாக நொறுங்கிய அந்த ஹெலிக்கொப்டர் கொளுந்து விட்டெரியும் நெருப்புடன் தரையில் விழுந்து நொறுங்கியது. இந் தத் தாக்குதலில் ஹெலிக்கொப்டரில் பயணம் செய்த விமானி மற்றும் துணை விமானி ஆகியோர் உடல் கருகி உயிரிழந்தனர்.

# அமெரிக்காவின் உளவு செயற்கைக்கோளை பின் தொடரும் ரஷ்ய செயற்கைக்கோள்கள்!



தங்களது உளவு செயற்கைக் கோளை ரஷ்யாவின் 2 செயற்கைக் கோள்கள் பின்தொடர்கின்றன என அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது. இதுகுறித்து டைம்ஸ் பத்திரிகைக்கு அமெரிக்க இராணுவ விண்வெளிப் படைப்பிரிவுத்தளபதிஜோன்ரெமாண்ட் அளித்துள்ள பேட்டியில், கடந்த நவம்பர் மாதம் செலுத்தப்பட்ட அமெரிககாவின் இரண்டு உளவு செயற்கைக் கோள்களை சுமார் 160 கிலோ மீற்றர் தொலைவு இடைவெளியில் பின்தொடர்கின்றன எனத் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய செயற்கைக்கோள்களின் செயல்பாடு அசாதாரணமாகவும், இடையூறு ஏற்படுத்தும் வகையில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அமெரிக்காவிடம் இருந்து தகவல்கள் வந்திருப்பதாகவும், அதை முழுவதும் படித்தபிறகு பதில் அளிக்கப்படும் என்று ரஷ்ய வெளியுறவு துணை அமைச்சர் செர்ஜி ரயாப்கோவ் கூறியுள்ளார்.

# கண்ணியில் சிக்கிய யானைக் குட்டிக்கு செயற்கைக்கால் பொருத்தி சாதனை



கம்போடியோவில்வேட்டைக் காரரின் கண்ணிவலையில் சிக்கிக் காலை இழந்த யானைக் குட்டிக்கு முதன்முறையாக செயற்கைக்கால் பொருத்தி மருத்துவர்கள் அசத்தியுள்ளனர்.

2 ஆண்டுகளுக்கு முன்பு வனத்தில் மோசமான உடல் நிலையுடன் கிடந்த 2 வயது யானைக்குட்டியை மீட்டு வனத் துறை ஊழியர்கள் பராமரித்து வந்தனர். வார வாரம் காலில் சேதமடைந்த திசுக்களை அகற்றி மாவுக்கட்டு போட்டு சிகிச்சை அளித்து வந்த நிலையில் தற்போது யானைக்குட்டிக்கு செயற்கைக்கால்பொருத்தி மருத்துவர்கள் புது முயற்சியை மேற்கொண்டுள்ளனர்.

உயிர் பிழைப்பது கடினம் என்ற நிலையில் மீட்கப்பட்ட யானைக்குட்டி, செயற்கைக்காலுடன் உற்சாகமாக வலம் வருவது நெகிழ்ச்சியளிப்பதாக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

# கலங்கவைக்கும் மருத்துவப் பணிக்கு நடுவிலும் இதயங்களை இணைக்கும் கொரோனா வைரஸ்

சீனாவில் கடந்த ஆண்டு இறுதியில் பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் பாதிப்பால் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆனால் வைரஸ் தொற்று பரவுவது இப்போதுதான் மட்டுப்படத் தொடங்கியுள்ளது. ஆனாலும், சீனாவில் களத்தில் உள்ள நிலைமைகள் பற்றிய தகவல்கள் குறைவாகவே வெளியில் தெரிகின்றன.

ஆரம்பத்தில் இந்த ஆட்கொல்லி நோய் பற்றி அந்த நாட்டில் இருந்து செய்தி நிறுவனங்கள் விரிவாக தகவல்களை வெளியிட முடிந்தது.

இருந்தபோதிலும், கடந்த சில நாள்களில், வைரஸ் தடுப்பில் அரசின் நடவடிக்கைகளை விமர்சிக்கும் பல கட்டுரைகள் இணைய தளங்களில் நீக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் பரவத் தொடங்கிய போது ஒரு டாக்டர் விடுத்த எச்சரிக்கைகளை வெளிவராமல் தடுக்க அதிகாரிகள் முயற்சித்தனர்.

அபூர்வமான நிகழ்வாக ஹூபேயில் உள்ள சுகாதார அலுவலர் ஒருவருடன் பிபிசி பேசியது. இந்த வைரஸ் பரவியதன் முக்கிய மையமாக அந்த மாகாணம் தான் உள்ளது.

தன்னுடைய அடையாளத்தை மறைத்துக் கொள்வதற்காக, தன் பெயரை யாவோ என குறிப்பிடுமாறு



அந்தப்பெண்மணி கேட்டுக்கொண்டார்.

ஹூபேய் மாகாணத்தின் இரண்டாவது பெரிய நகரான ஜியாங்கியாங் நகரில் ஒரு மருத்துவமனையில் யாவோ பணிபுரிகிறார். "காய்ச்சல் கிளினிக்" என குறிப்பிடப்படும் மையத்தில் அவர் வேலை பார்க்கிறார். அங்கு கொண்டு வரப்படும் ரத்தத்தில் கொரோனா வைரஸ் இருக்கிறதா என ஆய்வு செய்து கண்டறிவது அவருடைய வேலை.

இந்தநோய்பரவுவதற்குமுன்னதாக, சீன புத்தாண்டை குடும்பத்தினருடன் கொண்டாட குவாங்ஜோவ் நகருக்குச் செல்ல அவர் திட்டமிட்டிருந்தார்.

அவருக்கு முன்னதாக அவருடைய தாயும் குழந்தையும் அங்கு சென்றுவிட்டனர். ஆனால் நோய் பரவத் தொடங்கியதும் ஜியாங்கியாங்கில் இருந்து சேவை செய்ய அவர் முன்வந்தார்.

"நம் எல்லோருக்கும் ஒரு முறை தான் வாழ்க்கை என்பது நிஜம். ஆனால் 'நீ போயாக வேண்டும்' என்ற பலத்த குரல் என்னுள் ஒலித்துக் கொண்டிருந்தது" என்று பிபிசியிடம் அவர் கூறினார்.

முதலில் தன்னுடைய முடிவு பற்றிய சந்தேகங்களுக்கு அவர் விடை காண வேண்டியிருந்தது.

"எனக்கு நானே கூறிக் கொண்டது: தயார்படுத்திக் கொள். உன்னை நன்றாக பாதுகாத்துக் கொள்" என்று யாவோ தெரிவித்தார்.

"பாதுகாப்புக் கவச உடை இல்லாவிட்டாலும், நான் ஒரு மழைக் கோட்டை அணிந்து கொள்வேன். மாஸ்க் கிடைக்காவிட்டால், எனக்கு ஒரு மாஸ்க் அனுப்புமாறு சீனா முழுக்க உள்ள நண்பர்களை நான் கேட்டுக் கொள்வேன். எல்லாவற்றுக்கும் எப்போதும் ஒரு வழி கிடைக்கும்" என்கிறார் அவர்.

தாம் எதிர்பார்த்ததைவிட மருத்துவமனையில் மருத்துவ வசதிகள் தாராளமாகவே கிடைக்கின்றன என்று யாவோ தெரிவித்தார். தேவையான உபகரணங்களை அரசு வழங்கியுள்ளது. இதில் உதவிகரமாக தனியார் நிறுவனங்களும் பொருள்களை நன்கொடையாக அனுப்பியுள்ளன.

இருந்தபோதிலும் பாதுகாப்பு மாஸ்க் பற்றாக்குறை இருக்கிறது. பணியில் உள்ள எல்லோருக்கும் மாஸ்க் கிடைக்கவில்லை.

"இது சிரமமான பணி. மிகவும் சோகமானது, மனதை உருக்குலையை வைக்கக் கூடியது. பெரும்பாலான நேரங்களில், எங்களுடைய பாதுகாப்பு பற்றி சிந்திக்கக்கூட எங்களுக்கு நேரம் இல்லை" என்றார் யாவோ.

"மிகுந்த கவனத்துடன் நோயாளிகளுக்கு நாங்கள் சிகிச்சை அளிக்க வேண்டும். ஏனெனில் பலரும் மிகுந்த பயத்துடன் எங்களிடம் சிகிச்சைக்கு வருகின்றனர். அவர்களில் சிலர் பதற்றத்தில் நினைவிழக்கும் நிலையில் வருகின்றனர்."

அதிக எண்ணிக்கையில் வரும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க, மருத்துவமனை ஊழியர்கள், ஒவ்வொரு ஷிப்டிலும் 10 மணி நேரம் வரை வேலை பார்க்கின்றனர். இந்த ஷிப்டுநேரங்களில் யாரும் சாப்பிடுவது, தண்ணீர் குடிப்பது, ஓய்வெடுப்பது அல்லது கழிப்பறை செல்வது கூட கிடையாது என்று யாவோ கூறினார்.

"ஷிப்டு முடிந்து, பாதுகாப்பு உடைகளை நாங்கள் கழற்றும்போது, உள்ளே இருக்கும் உடைகள் வியர்வையால் முழுக்க நனைந்திருக்கும்" என்றார் அவர். "எங்களுடைய நெற்றி, மூக்கு, கழுத்து மற்றும் முகத்தில் மாஸ்க் அழுந்திய தன் ஆழமான பள்ளம் தெரியும், சில நேரங்களில் அதனால் வெட்டுக் காயங்களும் ஏற்பட்டிருக்கும்" என்று அவர் குறிப்பிட்டார்.

"என் சக அலுவலர்கள் பலர் ஷிப்டு முடிந்ததும் இருக்கையில் அமர்ந்தபடியே தூங்கிவிடுகிறார்கள். ஏனெனில் நடக்க முடியாத அளவுக்கு அவர்கள் மிகுந்த களைப்பாகி இருக்கிறார்கள்" என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வளவு சிரமங்கள் இருந்தாலும், மருத்துவமனை ஊழியர்கள் யாருக்கும் இந்த வைரஸ் தொற்று பரவவில்லை என்றும் யாவோ கூறினார்.

மக்களின் கனிவான மெசேஜ்கள் தனக்கும், தன்னுடைய சகாக்களுக்கும் உற்சாகத்தைக் கொடுத்திருக்கின்றன என அவர் குறிப்பிட்டார். சிலர் தங்களுக்கு உணவும், தினசரி பயன்பாட்டுக்கான பொருகளும் அனுப்பினர் எனவும் அவர் தெரிவித்தார்.

"அவர்கள் வீடுகளில் தனிமையில் வைக்கப்பட்டிருந்தாலும், எங்கள் இதயங்களை வைரஸ் இணைத்துள்ளது என கருதுகிறேன்" என்று யாவோ கூறினார்.

கொரோனா வைரஸ் பாதிப்பை அடுத்து சீன அரசு "ஓரளவுக்கு வேகமாக" நடவடிக்கை எடுத்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

"மேற்கத்திய நாடுகளில், சுதந்திரம் அல்லது மனித உரிமைகள் பற்றி நிறைய பேசுகிறீர்கள். ஆனால் இப்போது சீனாவில் வாழ்வா சாவா என்பது பற்றி நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம்" என்றார் யாவோ.

"நாளை சூரிய உதயத்தை நாம் பார்ப்போமா என்பது பற்றி நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம். எனவே அனைத்து மக்களும் செய்ய வேண்டியது, அரசுக்கு ஒத்துழைப்பு கொடுத்து, மருத்துவ அலுவலர்களுக்கு ஆதரவு தருவதுதான்" என்று யாவோ கூறினார்.

**நன்றி: பிபிசி தமிழ்.**

# 'கலைவளன்' சிசு நாகேந்திரன் மறைந்தார் பல்துறை ஆற்றல் மிக்க கலைஞரை இழந்தோம்!



தனது 99 வயதினை நெருங்கும் வேளையில் எம்மிடமிருந்து விடை பெற்று விட்டார் மூத்த எழுத்தாளரும் நாடக, கூத்து கலைஞரும் சமூகப் பணியாளரும் ஒளிப் படக் கலைஞருமான கலைவளன் சிசு நாகேந்திரன்.

நீண்ட காலம் ஆஸ்திரேலியா மெல்பனை வதிவிடமாகக் கொண்டிருந்தவர். ஒரு சில வருடங்களுக்கு முன்னர் அவரது புதல்வியும் பேரப்பிள்ளைகளும் அவரை சிட்னிக்கு அழைத்துச் சென்று, அங்கு ஒரு முதியோர் காப்பகத்தில் பராமரித்துக் கொண்டிருந்தனர்.

கடந்த சனிக்கிழமை திடீரென சுகவீனமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை மறைந்துவிட்டார் என்ற துயரச் செய்தி எம்மை வந்தடைந்தது.

யாழ். நல்லூர் இவரது பூர்வீகம் எனச் சொல்லப்பட்டாலும், பிறந்தது கேகாலையில் 1921 ஆம் ஆண்டில். இவரது பிறந்த




தினம் ஓகஸ்ட் மாதம் 09 ஆம்திகதி.

அந்நாளைய அரிவரி தொடக்கம் லண்டன் மற்றிக்குலேன் வரையில் யாழ். பரமேஸ்வரா கல்லூரியில் (இன்றைய யாழ். பல்கலைக்கழகம்) படித்த நாகேந்திரன், பின்னர் யாழ். மத்திய கல்லூரியில் வர்த்தக முகாமைத்துவம் கற்று, London Chamber of Commerce உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றினார்.

1944 இல் மன்னார் அரசாங்க அதிபராக கடமையாற்றிய சிற்றம்பலம் அவர்களிடம் தட்டச்சாளராக பணியாற்றும் அரச நியமனம் கிடைத்தது. பின்னர் கொழும்பில் அரச திணைக்களம் ஒன்றில் பணிபுரியும் போது கணக்காய் வாளராக பதவி உயர்வு பெற்றார். அதனைத் தொடர்ந்து, 1979 இல் சேவையிலிருந்து ஓய்வுபெறும் வரையில் பல்வேறு திணைக்களங்களில் பணியாற்றியிருக்கிறார்.

இளமைக் காலத்தில் மாணவர் தலைவராகவும் பல்துறை விளையாட்டு வீரராகவும் திகழ்ந்திருக்கிறார். உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், டெனிஸ், டேபிள் டெனிஸ் முதலானவற்றிலும் வல்லவராகியிருக்கிறார்.

இவரது கலை உலக வாழ்க்கையும் குறிப்பிடத் தகுந்தது. கொழும்பில் தொழில் நிமித்தம் வாழ்ந்த காலத்தில், 'ராஜ் நகைச்சுவை நாடக மன்றம்' இவரை உள்வாங்கியிருந்தமையால் இம்மன்றம் மேடையேற்றிய பல நாடகங்களில் தோன்றினார். அச்சுவேலி ராஜரட்ணத்துடன் இணைந்து 'சக்கடத்தார்' என்னும் நாடகத்தில் ஒரு பாத்திரமானார்.

இந்நாடகம் ஆயிரம் தடவைகளுக்கு மேல் மேடையேறியிருக்கும். ரகுநாதனின் 'நிர்மலா', வி. எஸ். துரைராஜா தயாரித்த 'குத்து விளக்கு' முதலான திரைப்படங்களிலும் தோன்றியிருக்கிறார்.

அந்நாள்களில் தமிழ் வானொலி நேயர்களின் விருப்பத்துக்குரிய நாடகங்களாகத் திகழ்ந்த சிறாப்பர் குடும்பம், லண்டன் கந்தையா முதலானவற்றிலும் நடித்திருக்கிறார்.

மேடை, வானொலி திரைப்பட, கூத்துக் கலைஞராகவும் இவர் திகழ்ந்தமையால், தனிப்பட்ட உரையாடல்களின் போதும் அங்கதமாகவும் பேசும் இயல்பினைக் கொண்டிருந்தவர்.

இங்கிலாந்திலும் சிறிது காலம் வாழ்ந்திருக்கும் இவர், அங்கு 'களரி' நாடகப் பள்ளியின் சார்பாக மேடையேறிய புதிய தொரு வீடு, அபசுரம், எந்தையும் தாயும் முதலானவற்றிலும் பங்கேற்றிருக்கிறார்.

1994 ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து விடைபெற்று ஆஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்த தருணத்தில் கலைஞர் தாசீசியஸ் உட்பட பலர் இவருக்கு அளித்த பிரிவுபசார வைபவத்தில் 'கலைவளன்' என்ற பட்டமளிக்கப்பட்டார்.

இவர் எழுதிய அந்தக் கால யாழ்ப்பாணம் பற்றிய கட்டுரைகள் நூலுருவாகி பலரதும் பாராட்டையும் பெற்றது.


'பிறந்தமண்ணும் புகலிடமும்' என்னும் மற்றுமொரு கட்டுரைத் தொகுதியையும் வரவாக்கினார்.

நாடகக் கலைஞனாக அறிமுகமாகி, எழுத்தாளனாக தன்னை வளர்த்துக் கொண்ட சிசு. நகேந்திரன், சிறந்த ஒளிப் படக் கலைஞருமாவார். சில வருடங்களுக்கு முன்னர் ஆரோக்கியமாக வாழ்வதற்குரிய சில உடற்பயிற்சிகள் பற்றிய இவரது பயிற்சியும் காட்சியும் இடம்பெற்ற இறுவட்டையும் வெளியிட்டார்.

ஆஸ்திரேலியாவில் தமிழ் இலக்கிய கலைச்சங்கம், விக்ரோரியா ஈழத் தமிழ்ச் சங்கம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், இலங்கை மாணவர் கல்வி நிதியம், விக்ரோரியா கே.சி. தமிழ் மன்றம், விக்ரோரியா தமிழ் மூத்த பிரஜைகள் சங்கம் ஆகியனவற்றிலும் இதய சுத்தியோடு இயங்கியவர்.

ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் சேவை நலன் பாராட்டு விருதும், ஆஸ்திரேலியா கம்பன் கழகத்தின் மாருதி விருதும், அக்கினிக் குஞ்சு இணைய இதழின் வாழ்நாள் சாதனையாளர் விருதும் பெற்றவர்.

முன்னர் எழுதிய 'பழகும் தமிழ்ச் சொற்களின் மொழி மாற்று அகராதி' – (தமிழ் – ஆங்கிலம்) நூலின் இரண்டாம்




பாகமும் எழுத வேண்டும் என்ற எண்ணத்தில் அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தவர்.

சுமார் 99 ஆண்டுகள் முழுமையான வாழ்வு வாழ்ந்து விடை பெற்றிருக்கும் ஆளுமை கலைவளன் சிசு. நாகேந்திரன் அவர்களின் நினைவுகளே இனி எம்மிடம் எஞ்சியிருக்கும்.

எமது ஆழ்ந்த அஞ்சலிகளை தெரிவிக்கின்றோம்.

**முருகபூபதி**

# வன்னியில் களமிறக்கும் லிங்கநாதன், சிவலிங்கம்

## புளொட் அமைப்பின் சார்பில்

வவுனியா, பெப். 13

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பங்காளிக் கட்சியான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) களமிறக்கவுள்ள இரண்டு வேட்பாளர்கள் பற்றிய விவரம் வெளியாகியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனும், முல்லைத்தீவு வித்தியானந்தா பாடசாலையின் முன்னாள் அதிபர் கந்தையா சிவலிங்கமும் நிறுத்தப்படவுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னி மாவட்டத்தில் முல்லைதீவு மற்றும் வவுனியாவில் எமது கட்சி சார்பில் இரு வேட்பாளர்களைக் களம் இறக்கவுள்ளோம். இன்னும் ஓரிரு வாரங்களில் அந்தந்த மாவட்டக் குழு தீர்மானித்து அந்த வேட்பாளர்கள் யார் என்பதை இறுதி செய்து அறிவிப்போம் என புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் அண்மையில் வவுனியாவில் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய முன்னாள் வவுனியா நகர பிதாவும், வடக்கு மாகாணசபை உறுப்பினருமான ஜி.ரி.லிங்கநாதன் மற்றும் முல்லைத்தீவு வித்தியானந்தா பாடசாலையின் முன்னாள் அதிபரும் முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசனின் சகோதரருமான க.சிவலிங்கம் ஆகியோரை வேட்பாளர்களாக நிறுத்துவதற்குக் கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

விரைவில் அதனை புளொட் உத்தியோகபூர்வமாக அறிவிக்க உள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# பாடசாலை மாணவனை தாக்கிய ஏழு சகபாடிகள்

## ஆசிரியர்களின் உத்தரவில் நடந்ததாம்

கொழும்பு, பெப். 13

ஆசிரியர்களின் அறிவுறுத்தலின் பேரில் பாடசாலை மாணவர்கள் சிலரால் மாணவன் ஒருவர் கும்பலாக தாக்கப்பட்ட விவகாரத்தில் உரிய விசாரணை நடத்தி உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் இரண்டு ஆசிரியர்களின் உத்தரவின் பேரில், ஏழு பாடசாலை மாணவர்கள், ஒரு மாணவனைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். அம்பலாங்கொடை குலரத்ன வித்தியாலயத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. தரம் 7 மாணவனே தாக்கப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தை, சம்பவம் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கடிதம் மூலம் முறையிட்டிருந்தார்.

கடந்த ஜனவரி 16ஆம் திகதி, பாடசாலையில் விளையாட்டுப் பயிற்சியில் அந்த மாணவன் பங்குபற்றியிருக்கவில்லை. இதனால் கோபமடைந்த இரண்டு ஆசிரியர்கள், அவரது சக வகுப்பு மாணவர்கள் ஏழு பேரை அந்த மாணவனை தாக்கும்படி உத்தரவிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மாணவன் ஆசிரியர் ஒருவரிடம் முறையிட்டுள்ளார். ஆசிரியரிடம் முறையிட்டமைக்காக இன்னொரு ஆசிரியரால் மீளவும் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அம்பலங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவம் குறித்து விசாரிக்க அம்பலங்கொடை வலயக் கல்விப் பணிப்பாளர் மூன்று பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளார். (ஐ)

# கூகுளின் சர்வதேச போட்டியில் யாழ்.இந்து மாணவன் வெற்றி



யாழ்ப்பாணம், பெப். 13

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் நித்தியானந்தன் மாதவன், சர்வதேச ரீதியில் நடத்தப்பட்ட கூகுள் கோட் இன் - 2019 (Google Code - In 2019) போட்டியில் ஒரு பிரிவில் முதலிடத்தை (Grand Prize Winner) பெற்றுள்ளார்.

இவருக்கான கௌரவிப்பு விழா எதிர்வரும் ஜூன் மாதம் கலிபோர்னியாவில் உள்ள கூகுள் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் 76 நாடுகளைச் சேர்ந்த 3 ஆயிரத்து 566 மாணவர்கள் பங்கேற்றனர். 29 திறந்த மூல நிறுவனங்களுடன் 20 ஆயிரத்து 840 பணிகள் (tasks) வழங்கப்பட்டன.

இதில் Apertium என்ற மென்பொருள் தொடர்பில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உயிரியல் பிரிவு மாணவன் நித்தியானந்தன் மாதவன் முதலிடத்தைப் பெற்று பட்டம் வென்றுள்ளார்.

# இலங்கைக்கு அருகே கடலில் நில அதிர்வு!

கொழும்பு, பெப். 13

இலங்கைக்கு தென்கிழக்கே, இந்து சமுத்திரத்தில் நேற்று அதிகாலை 2.34 மணியளவில் பலத்த நில அதிர்வு ஒன்று பதிவாகியுள்ளதாக வளி மண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அம்பாந்தோட்டையிலிருந்து 240 கிலோமீற்றர் தொலைவில், தென்கிழக்குக் கடற்பிராந்தியத்தில் 5.4 ரிச்டர் அளவில் நில அதிர்வு பதிவாகியதாகத் தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

10 கிலோ மீற்றர் ஆழத்தில் கடல்பாறைக்குள் ஏற்பட்டுள்ள இந்த நில அதிர்வால் இலங்கைக்கு எவ்வித சுனாமி எச்சரிக்கையும் இல்லை என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மாத்தறை மற்றும் அம்பலன்தொட ஆகிய பகுதிகளில் இந்த நில அதிர்வு உணரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# தபாலில் வந்த ஐஸ்!

கொழும்பு, பெப். 13

மெக்சிக்கோவில் இருந்து தபால் மூலம் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்ட 75 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் ரக போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் கொழும்பு மத்திய தபால் நிலையத்தில் வைத்து போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சஜித்தின் புதிய கட்சிக்கு ஆணைக்குழு அங்கீகாரம்!



கொழும்பு, பெப். 13

சஜித் பிரேமதாஸ தலைமையிலான தேசிய கூட்டணியை கட்சியாகப் பதிவு செய்யும் விண்ணப்பத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழு அங்கீகரித்திருப்பதாக ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

புதிய கட்சியின் பெயரை ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் போது National Power என வருவதால் அது ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பாதகமானதாக அமையும் என அந்தக் கட்சியின் செயலாளர் அகில விராஜ் காரியவசம் சுட்டிக்காட்டி புதிய கட்சியைப் பதிவு செய்ய வேண்டாமெனக் கோரி கடிதம் எழுதியிருந்தார்.

அதனைப் பரிசீலித்த ஆணைக்குழுத் தலைவர் புதிய கட்சியின் ஆங்கில வாசகத்தில் தேசிய என்ற சொல்லை நீக்கி சமாதான மக்கள் சக்தி என வரும் விதத்தில் 'சமகி ஜனபலய' என்று கருத்துப்பட பயன்படுத்துமாறும் புதிய கூட்டணியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் அகில விராஜ் காரியவசம் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் திருத்தியமைக்கப்பட்ட பெயரின் கீழ் அந்தக் கட்சியைப் பதிவு செய்துள்ளதாக ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்தார்.

புதிய கட்சிப் பதிவு செய்யப்பட்ட போதிலும் கட்சிக்கான சின்னம் இதுவரை அறிவிக்கப்படவில்லை.




# சீனாவிலிருந்து அழைத்து வரப்பட்ட மாணவர்கள் 16ஆம் திகதி விடுதலை

கொழும்பு, பெப். 13

கொரோனா வைரஸ் பரவிய சீனாவின் வுஹான் நகரில் இருந்து அழைத்து வரப்பட்டு தியத்தலாவை இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 33 மாணவர்களும் எதிர்வரும் 16 ஆம் திகதி விடுவிக்கப்படுவார்கள் என்று தலைமை தொற்று நோயியல் நிபுணர் சுதாத் சமரவீர தெரிவித்தார்.

இந்த 33 மாணவர்களும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி கொரோனா வைரஸ் பரவலின் மையப்புள்ளியான சீனாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு, தியத்தலாவை முகாமில் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடையும் நிலையிலேயே விடுவிக்கப்படவுள்ளனர்.

33 மாணவர்களும் கொரோனா தொற்றுக்குள்ளானமைக்கு எந்த அறிகுறியும் இல்லை. அவர்கள் ஆரோக்கியமாகச் செயற்படுகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# தொடரை வென்றது நியூஸிலாந்து

இந்தியா அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியு மான ஒருநாள் போட்டியில், நியூஸிலாந்து கிரிக்கெட் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை, நியூஸிலாந்து அணி முழுமை யாகக் கைப்பற்றியுள்ளது.

மவுண்கானுய் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மா னித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 296 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதன்போது இந்தியா அணி சார்பில், பிரீத்வி ஷா 40 ஓட்டங்களையும், மாயங் அகர்வால் 1 ஓட்டத்தினை யும், விராட் கோஹ்லி 9 ஓட்டங்களையும், ஸ்ரேயஸ் ஐயர் 62 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

லோகேஷ் ராகுல் 112 ஓட்டங்களையும், மணீஷ் பான்டே 42 ஓட்டங்களையும், சர்துல் தாகூர் 7 ஓட்டங் களையும் பெற்றுக்கொண்டனர்.

ரவீந்திர ஜடேஜா 8 ஓட்டங்களுடனும், நவ்தீப் சைனி 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந் தனர்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில், ஹமீஷ் பென்னட் 4 விக்கெட்டுகளையும், கெய்ல் ஜேமீசன் மற்றும் ஜேம்ஸ் நீம் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 297 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நியூஸிலாந்து அணி,



47.1 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கைக் கடந்தது. இதனால் நியூஸிலாந்து கிரிக்கெட் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது நியூஸிலாந்து அணி சார்பில், மார்டின் கப்டில் 66 ஓட்டங்களையும், ஹென்றி நிக்கோல்ஸ் 80 ஓட்டங்களையும், கேன் வில்லியம்சன் 22 ஓட்டங்களை யும், ரோஸ் டெய்லர் 12 ஓட்டங்களையும் ஜேம்ஸ் நீம் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

டொம் லாதம் 32 ஓட்டங்களுடனும், கொலின் டி கிராண்ட்ஹோம் 58 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இந்தியா அணியின் பந்து வீச்சில், யுஸ்வேந்திர சஹால் 3 விக்கெட்டுகளையும், சர்துல் தாகூர் மற்றும் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா 1 விக்கெட்டினை யும் வீழ்த்தினர்.

கிட்டத்தட்ட 31 வருடங்களுக்கு பிறகு இந்தியக் கிரிக்கெட் அணி ஒருநாள் தொடரில் வைட் வோஷ் ஆகியுள்ளது.

இப்போட்டியின் ஆட்டநாய கனாக, 103 பந்துகளில் 9 பவுண்ரிகள் அடங்களாக 80 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஹென்றி நிக்கோல்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.

தொடரின் நாயகனாக, அதி கபட்ச ஓட்டங்களை குவித்த நியூ ஸிலாந்து அணியின் அனுபவத் துடுப்பாட்ட வீரரான ரோஸ் டெய்லர் தெரிவு செய்யப்பட்டார்.



# இங்கிலாந்து அணி அறிவிப்பு!

இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ள இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு டெஸ்ட் போட்டிகள் அடங்கிய தொடரொன்றுக்காக இங்கி லாந்து அணி அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

காலி மற்றும் கொழும்பில் இடம்பெறவுள்ள இந்தப் போட்டிகள், மார்ச் 19 மற்றும் 27 ஆம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ளன.

இந்தத் தொடருக்காக ஆரம்ப துடுப்பாட்ட வீரர் கேடொன் ஜென்னிங்ஸ் மற்றும் விக்கெட் காப்பாளர் பென் போக்ஸ் ஆகியோர் இங்கிலாந்து அணியில் மீண்டும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஜொன்னி பெயார்ஸ்டோ, ஜேம்ஸ் அன்டர்சன் மற்றும் மொயின் அலி ஆகியோருக்கு அணியில் இடம் வழங்கப்படவில்லை.

அறிவிக்கப்பட்டுள்ள இங்கிலாந்து அணி வருமாறு–

ஜோ ரூட் (அணித்தலைவர்), பென் ஸ்டோக்ஸ் (உபதலைவர்), டொம் பேஸ், ஸ்டுவர்ட் ப்ரோட், ஜொஸ் பட்லர், ஷக் க்ரௌலி, சாம் கரண், ஜோ டென்லி, பென் போக்ஸ், கீட்டன் ஜேனிங்ஸ், ஜெக் லீச், மெட் பார் கின்சன், ஒல்லி பேப், டொம் சிப்லேய், கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட்.

# 5 வீரர்களுக்கு போட்டித் தடை

19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டி யின் முடிவில் மோதலில் ஈடுபட்ட வீரர்களுக்கு ஐ.சி.சி. தடை விதித்துள்ளது.

பங்களாதேஷின் தௌகித் கிரிடோய், சமீம் ஹொசைன், ரகிபுல் ஹசனுக்கும் இந்தி யாவின் ஆகாஸ் சிங், ரவி பிஸ்னோய் ஆகிய இருவருக்குமே இவ்வாறு தடை விதிக்கப்பட் டுள்ளது.

இந்த வீரர்கள் ஐ.சி.சியின் ஒழுக்காற்று விதிமுறைகளை மீறியுள்ளனர் எனத் தெரி வித்துள்ள ஐ.சி.சி., ஐந்து வீரர்களுக்கும் நான்கு முதல் பத்து போட்டித் தடையை விதித்துள்ளது.

இறுதிப்போட்டியில் இரு அணிகளும் கடுமையாகப் போராடின எனத் தெரிவித் துள்ள ஐ.சி.சி., எனினும் இறுதிப்போட்டி முடிவால் ஏற்பட்ட ஏமாற்றம் மற்றும் உற்சாகம் காரணமாகச் சில வீரர்கள் மோசமான நடவடிக்கையில் ஈடுபட் டுள்ளனர். இதற்குளங்கள் விளையாட்டில் இடமில்லை எனத் தெரிவித்துள்ளது.

கிரிக்கெட்டின் அடிப்படையே கௌர வம் தான் என தெரிவித்துள்ள ஐ.சி.சி., வீரர் கள் சுய ஒழுக்கத்தை வெளிப்படுத்தவேண் டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். வெற்றி பெற்ற எதிரணியை பாராட்டவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். தங்கள் அணி யின் வெற்றியைக் கொண்டாடவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர் எனவும் தெரி வித்துள்ளது.

இந்திய – பங்களாதேஷ் அணிகளின் வீரர்கள் கடும் வார்த்தை பிரயோகங்களில் ஈடுபட்டமையுடன் ஒருவரை ஒருவரையொரு வர் தள்ளிவிட முயன்ற சம்பவத்தினாலும் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான உலக கிண்ண இறுதிப்போட்டி சர்ச்சைக்குரிய விதத்தில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.






# இந்திய அணியின் களத்தடுப்பு சர்வதேசத் தரத்தில் இல்லை

இந்திய அணியின் களத்தடுப்பு சர்வதேசத் தரத்தில் இல்லை என அணியின் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் தொடரை இழந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளி யிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், ‘இந் திய அணியின் களத்தடுப்பு சர்வதேச தரத்தில் இல்லை. இதுவே நியூசிலாந்துடனான ஒருநாள் தொடர் தோல் விக்குக் காரணமாகும்.

ஒருநாள் தொடர் முழுவதும் இந்திய அணியின் மன அமைதியும் அவர்கள் களத்தடுப்பில் ஈடுபட்ட வித மும் சர்வதேசப் போட்டிகளுக்கு உகந்தனவ அல்ல.

மூன்றாவது ஒரு நாள் போட்டியில் தடுமாறிய நிலையிலிருந்து நாங்கள் மீண்டு வந்து 296 ஓட் டங்களை பெற்றமை சாதகமான விடயமாகும். களத் தடுப்பில் நாங்கள் சிறப்பாகச் செயற்படவில்லை.

ஒருநாள் தொடரில் நியூசிலாந்து அணியினர் அதிக தீவிரத்துடன் விளையாடினார்கள். அவர்கள் 3 – 0 என்ற அடிப்படையில் வெற்றிபெறுவதற்குத் தகுதி யானவர்கள்.

ஐ.சி.சியின் டெஸ்ட் சம்பியன்சிப் காரணமாக ஒவ்வொரு டெஸ்ட் போட்டியும் முக்கியமானது. எங்களிடம் சமபலத்துடனான டெஸ்ட் அணி உள்ளது.

நாங்கள் தொடரை வெல்லமுடியும் எனக் கருதுகின் றேன். ஆனால் அதற்கு சரியான மனோநிலையுடன் விளையாடுவது அவசியம் – என்றார்.

# டிப்பரில் சிக்கியது 100 கிலோ கஞ்சா!

## விசேட அதிரடிப்படையினர் நேற்று மானிப்பாயில் வைத்து மடக்கினர்



யாழ்ப்பாணம், பெப். 13

மானிப்பாய் பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினர் நேற்றுக் காலை மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது டிப்பர் வாகனம் ஒன்றிலிருந்து 100 கிலோ கஞ்சாவைக் கைப்பற்றினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் போதைப்பொருள் கடத்தப்படுவதாக விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவினருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து, விசேட அதிரடிப்படையினர் காரைநகர்–யாழ்ப்பாணம் வீதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது, அந்த டிப்பர் வாகனத்தை விசேட அதிரடிப் படையினர் வழி மறித்துள்ளனர்.

இதன்போது டிப்பர் வாகனச் சாரதி, நடு வீதியில் நிறுத்தி விட்டுத் தப்பி ஓடியுள்ளார். அந்த டிப்பர் வாகனத்தை சோதனையிட்ட விசேட அதிரடிப் படையினர் 100 கிலோ கஞ்சாவை மீட்டனர் எனத் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனம் போதைப் பொருள்களுடன் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ – 07)

# பல்கலை மாணவிகளின் அலைபேசிகள் திருட்டு

## நால்வர் பொலிஸில் சிக்கினர்



யாழ்ப்பாணம், பெப். 13

யாழ்ப்பாணம்நகரப்பகுதியில்பல்கலைக்கழக மாணவிகளின் அலைபேசிகளைத் திருடிய குற்றச் சாட்டில் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடந்த வாரம் பல்கலைக்கழக மாணவிகளின் அலைபேசிகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதியப்பட் டிருந்தன.

அவை தொடர்பில் விசாரணைகளைத் துரிதப்படுத்திய யாழ்ப்பாணம் பொலிஸார் நல்லூர் பின் வீதியில் உள்ள இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்தமையுடன் திருட்டுப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச் சாட்டில் நகரப் பகுதியில் அலைபேசி விற்பனை நிலைய உரிமையாளர்கள் இருவரையும் கைது செய்தனர்.

தொடர்ந்து மேற்கொண்ட விசா ரணையில் பல்கலைக்கழக மாணவிகளின் அலைபேசிகளைத் திருடினார் என அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் யாழ்ப்பாணம் நீதிவான் முன்னிலையில்முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ –07)

# பண்பாட்டைக் கட்டிக்காக்க மாணவர்கள் கற்கவேண்டும்

## சிறீதரன் எம்.பி. வலியுறுத்தல்



கிளிநொச்சி, பெப். 13

எமது பண்பாட்டைக் கட்டிக்காப்பதற்காய் மாணவர்கள் கற்கவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பளை மாசார் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழர்களுக்கு என்று தனித்துவமான கலாசாரங்களும் பண்பாட்டியலும் இருக்கிறது. எங்களிடம் இருந்து பல இனங்கள் தங்களது கலாசாரத்தைக் கட்டியெழுப்பியிருக்கிறார்கள். ஆனால் நாங்கள் எங்கள் பண்பாட்டியலை மறந்தவர்களாக அந்நிய கலாசாரத்திற்கு அடிமைப் பட்டவர்களாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதுவும் ஒருவகையான இன ஒடுக்குமுறையே.

நாம் கற்கும் கல்வியானது எமது இனத்துக்கானதாயும் எமது பண்பாட்டையும் கட்டிக்காக்கும் வகையில் அமையவேண்டும் – என்றார்.

பாடசாலை முதல்வர் கருணானந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் கபிலரூபன், கிளிநொச்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சிவபாலன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் உபதவிசாளர் மு.கஜன், அயற்பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# 25 வருடங்களுக்கு ஐ.தே.கவால் ஆட்சியைப் பிடிக்கவே முடியாது

## அடித்துச் சொல்கிறார் நிமல் சிறிபாலடி சில்வா



கொழும்பு, பெப். 13

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் பிரச்சினையால் அவர்களுக்கு இன்னும் 25 வருடங்களுக்கு ஆட்சி அதிகாரத்துக்கு வரமுடியாது. அதனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நிறைவேற்று அதிகாரத்தை வழங்கியதுபோல் எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தையும் பெற்றுக் கொடுக்கவேண்டும் என நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

ஊவா பரணகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலின்போது பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகள் செயற்பட்டு வந்தன. என்றாலும் அனைத்துச் சக்திகளுக்கும் எதிராக மக்கள் செயற்பட்டு கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றி பெறச் செய்ய நடவடிக்கை எடுத்தனர்.

வடக்கு –கிழக்கில் எங்களுக்கு வாக்குகள் இல்லாமல்போகும்போது தெற்கு மக்கள் நாட்டுக்காக கட்சி பேதமின்றிச் சிறந்த தீர்மானம் ஒன்றை எடுத்தனர். நாடு சென்றுகொண்டிருந்த போக்கை மாற்றியமைக்கவேண்டும் என்ற தேவை மக்களுக்கு இருந்தது.

அத்துடன் ஐக்கிய தேசிய கட்சியினால் ஏற்பட்ட தவறுகளை இன்று அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்மானங்களை அவர்கள் அன்று எடுக்கவில்லை. மக்கள் விரக்தியடைக்கூடிய தவறான தீர்மானங்களையே எடுத்தார்கள் என்பதைத் தற்போது அவர்கள் உணர்கின்றனர்.

நாட்டு வளங்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்தார்கள். அதனால் மக்களின் எதிர்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டது – என்றார். (ஐ)

# 4 மாவட்டங்களில் காட்டுத் தீ பரவல்

## சுற்றுலாப்பயணிகளுக்குத் தடை

கொழும்பு, பெப். 13

நான்கு மாவட்டங்களில் காட்டுத் தீ பரவல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் ஜானக ஹந்துன் பத்திராஜ இதனைத் தெரிவித்துள்ளார்.

பதுளை, மொனராகலை, கண்டி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் காட்டுத் தீ பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். திட்டமிட்டு இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்பது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு எவரேனும் கைது செய்யப்பட்டால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, கண்டி – ஹந்தான மலைக்குன்றில் தீ பரவக்கூடிய பகுதிகளுக்குச் செல்வதற்கு சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மலைக்குன்றுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் நடவடிக்கையால் தீ பரவல் சம்பவங்கள் பதிவாகின்றன எனப்பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# மாங்குளம் வைத்தியசாலை வளாகத்தில் மனித எச்சங்கள்!

## ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

முல்லைத்தீவு, பெப். 13

மாங்குளம் வைத்தியசாலை வளாகத்துக்குள் மனித எச்சங்கள் காணப்பட்டமையை அடுத்து அவை தொடர்பில் அகழ்வுப் பணி



களை முன்னெடுக்குமாறு முல்லைத்தீவு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மாங்குளம் வைத்தியசாலை வளாகத்துக்குள் புனர்வாழ்வு நிலையத்துக்கான கட்டடம் அமைப்பதற்காகக் கண்ணிவெடி அகழ்வுப் பணிகள் இடம்பெறுகின்றன. இதன்போது மனித எச்சங்கள் (கை, கால்) சில மீட்கப்பட்டன. அது தொடர்பில் மாங்குளம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் நேற்று முற்பகல் முல்லைத்தீவு நீதிவான் எஸ்.லெனின் குமார், மாங்குளம் வைத்தியசாலை வளாகத்தில் விசாரணைகளை முன்னெடுத்தார்.

மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியை அண்டிய இடங்களிலும் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க நீதிவான் உத்தரவிட்டார். அதனடிப்படையில் பொலிஸார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படு கின்றன.

இதேவேளை, மாங்குளம் வைத்தியசாலை வளாகத்துக்குள் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. (ஐ)



# வீரவன்ஸவுக்கு எதிரான வழக்கு செப்ரெம்பரில் விசாரணைக்கு

கொழும்பு, பெப். 13

அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிரான சொத்துக்களை சட்ட விரோதமாகக் கையகப்படுத்திய வழக்கு செப்ரெம்பர் 07 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு வரவுள்ளது.

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது வழக்கை செப்ரெம்பர் மாதம் 07 ஆம் திகதி மற்றும் 9 ஆம் திகதிகளில் விசாரணைக்கு உட்படுத்தவுள்ளதாகவும், எனவே வழக்கு விசாரணையை அன்றைய தினம் வரை ஒத்திவைப்பதாகவும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியராச்சி அறிவித்தார்.



2009 - 2014 க்கு இடையில் இராஜாங்க அமைச்சராக விமல் வீரவன்ஸ இருந்த காலத்தில் அவரால் ஈட்டப்படாத சுமார் 7.5 கோடி ரூபா பணம் மற்றும் சொத்துக்களுக்கு உரிமையாளராக இருந்த குற்றச்சாட்டின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 2052 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு

கொழும்பு, பெப். 13

அரசால் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 52 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் ஜடால் மன்னப்பெரும இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த வாரத்தில் மாத்திரம் ஆயிரத்து 798 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், அதிக நெல் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே, பொலன்னறுவை, மாத்தளை, கம்பஹா, கண்டி, பதுளை, அம்பாந்தோட்டை, மொனராகலை, இரத்தினபுரி, மாத்தறை மற்றும் திருகோணமலை உள்ளிட்ட மாவட்டங்களில் நெல் கொள்வனவு நடவடிக்கை இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# ரணிலின் சகாக்களை ஓரம் கட்டவுள்ள சஜித்

கொழும்பு, பெப். 13

சஜித் பிரேமதாஸ தலைமையில் அமையவுள்ள புதிய அரசியல் கூட்டணியில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய சகாக்கள் எனக் கருதப்படும் சிலருக்கு எதிர்வரும்நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு மறுக்கப்படலாமென நம்பகரமாக அறியமுடிகின்றது.

இதன்படி தற்போதைய எம்.பிக்களான ரவி கருணாநாயக்க, வஜிர அபேவர்தன உட்பட்ட சிலருக்கு சஜித்தின் அரசியல் கூட்டணியில் போட்டியிடும் வாய்ப்பு மறுக்கப்படலாமென தெரிகின்றது.

அப்படி மறுக்கப்படுவோருக்கு தேசியப் பட்டியலில் இடமளிக்கப்படலாமெனச் சொல்லப்பட்டாலும் அது உறுதியான முடிவல்லவென விடயமறிந்த வட்டாரங்கள் கூறின.

# ரஞ்சனின் தொலைபேசிப் பதிவுகளை வழங்குமாறு சட்டமா அதிபர் உத்தரவு

கொழும்பு, பெப். 13

மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவும் ரஞ்சன் ராமநாயக்கவும் உரையாடிய 12 தொலைபேசிப் பதிவுகளைத்தனதுபரிசீலனைக்காக சமர்ப்பிக்குமாறு சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா பதில் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவைப் பணித்துள்ளார்.

முன்னதாக ரஞ்சன் ராமநாயக்க எம்.பி. நீதிபதி கிஹானை அச்சுறுத்தினார் என முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன எனபதில்பொலிஸ்மாஅதிபர் சட்ட மா அதிபருக்கு எழுத்துமூலம் அறிவித்திருந்த நிலையில் சட்ட மா அதிபர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

நீதிபதி கிஹானை கைது செய்யக் கோரும் சட்டமா அதிபர் அதனைப் பதில் பொலிஸ்மா அதிபர் இழுத்தடிக்கிறார் எனக் கரு துவதால் இந்த உத்தரவை அதிரடியாகப் பிறப்பித்துள்ளார். (ஐ)

# ரஞ்சனின் பிணை கோரிக்கை நீதிமன்றத்தினால் நிராகரிப்பு

கொழும்பு, பெப். 13

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் பிணை கோரிக்கை நுகேகொடை நீதவான் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுப் புதன்கிழமை நுகேகொடை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அவரைத் தொடர்ந்தும் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீதிபதிகளில் விடயங்களில் தலையீடு செய்தமைக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டது.

சமூக ஊடகங்களில் வெளியான அவரது சர்ச்சைக்குரிய தொலைபேசி உரையாடல்களை அடுத்து நுகேகொடை நீதவான் வழங்கிய பிடியாணை உத்தரவைத் தொடர்ந்து ஜனவரி 14 ஆம் திகதி அவரது இல்லத்தில் வைத்து ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டார்.

மேல் நீதிமன்ற நீதிபதிகளான பத்மினி என்.ரணவக்க குணதிலக, கிஹான் பிலப்பிட்டிய மற்றும் தம்மிக்க ஹேமபால ஆகியோருடன் ரஞ்சன் ராமநாயக்க பேசிய குரல் பதிவுகளே இவ்வாறு வெளியாகியிருந்தன.

# தனிச் சிங்கள அரசை உருவாக்க வேண்டும்

## ஞானசார தேரர் பரபரப்புக் கருத்து

கொழும்பு, பெப். 13

தனிச் சிங்கள அரசை உருவாக்கி, அடிப்படைவாத சிந்தனைகளற்ற தமிழ், முஸ்லிம் புதிய அரசியல் தலைவர்களை அதற்குள் உள்ளவங்கவேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனாவின் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட நேரத்தில் இருந்து இன்று வரை தான் ஒரு சிங்கள பௌத்த தலைவன் என்பதைப் பல செயற்பாடுகளின் ஊடாக நிரூபித்துள்ளார்.

நாட்டில் ஒரு சட்டமே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். எமது நாட்டில் இனங்களுக்கிடையில் சட்டங்கள் வேறுபடுத்தப்பட்டுள்ளன. ஒரு நாட்டில் ஒரு சட்டத்தையே அனைத்து இன மக்களும் பின்பற்றவேண்டும் என்ற கொள்கையை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதிக்கு முழு ஒத்துழைப்பையும் பெரும்பாலான மக்கள் வழங்க வேண்டும்.



நாடாளுமன்றத்தின் பாரம்பரிய முறைமைகளே பல நெருக்கடிகளுக்கும், அரச நிர்வாகத்துக்கும் தடையாக உள்ளன. எனவே உருவாகும் தனிச் சிங்கள அரசில் அடிப்படைவாதக் கொள்கைகளற்ற தமிழ் – முஸ்லிம் இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய அரசியல்வாதிகள் உள்வாங்கப்படவேண்டும் – என்றார்.

# மின்சார விபத்துக்கள் காரணமாக கடந்த வருடம் 103 பேர் உயிரிழப்பு

கொழும்பு,பெப்.12

இலங்கை 2019 ஆம் ஆண்டில் மின்சார விபத்துக்கள் காரணமாக 103 இறப்புகளைப் பதிவு செய்துள்ளது. இதுவே 2018 ஆம் ஆண்டில் 89 இறப்புகளாக காணப்பட்டதாகவும் மின்சாரத் துறையின் ஒழுங்குறுத்துகை நிறுவனமான இலங்கையின் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள 'மின்சார விபத்துக்கள் அறிக்கை – 2019' இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் மின்சாரம் காரணமாக தென் மாகாணத்தில் 30 இறப்புகள் பதிவாகியுள்ளன. மிகக் குறைவான மின்சார மரணம் மேற்கு மாகாணத்தில் பதிவாகியுள்ளது.

2015 -2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மின்சாரம் காரணமாக 97 இறப்புகள் தென் மாகாணத்தில் பதிவாகியுள்ளன, அதே காலப்பகுதியில் ஏனைய மாகாணங்களில் பதிவான மின்சார மரண வீதங்களுடன் ஒப்பிடும்போது இது நாட்டில்ஏற்பட்ட மிகஉயர்ந்ததொகையாகக் கருத்தப்படுகிறது.

விளை நிலங்களைப் பாதுகாப்பதற்காக அல்லது வன விலங்குகளைக் கொல்வதற்காக சட்டவிரோத மின் இணைப்புகளை ஏற்படுத்துவது போன்ற சில காரணங்கள் நாட்டில் இந்த மின்சார உயிரிழப்புகளுக்கு முக்கிய காரணங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலும், வீடுகள்,காரியாலயங்களில் சிறிய அளவிலான மின்சார பழுதுபார்ப்பு பணிகள் மற்றும் மின் இணைப்புகளுக்கு அருகில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளும் இந்த மின்சார விபத்துக்களுக்குக் காரணங்களாக அறியப்பட்டுள்ளன.

நாட்டின் மின்சார பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பல பாதுகாப்பு விதிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளமையுடன், இலங்கையில் உள்ள அனைத்துக் கிராமங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பாதுகாப்பு தூதர்களின் தேசிய வலையமைப்பை உருவாக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளதாகவும் இலங்கையின் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாமம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல. 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.02.2020 இல் வெளியிடப்பெற்றது.